# புதிய ஏற்பாட்டில் ராஜ்யமும் உடன்படிக்கையும்

## பாடம் 1

## புதிய ஏற்பாட்டு இறையியலை நாம் ஏன் கற்றுக்கொள்ள வேண்டும்?

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**அறிமுகம் ........ 1**

**பரிசுத்த ஆவியானவரால் வேதம் அருளப்படுதல் மற்றும் வேத அதிகாரம் ........ 3**

- **உறுதிப்பாடுகள் ........ 4**
    - பன்னிரண்டு சீஷர்கள் ........ 5
    - அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ........ 6
    - புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் ........ 7
- **தெளிவுபடுத்தல்கள் ........ 9**
    - வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் ........ 9
    - வேத அதிகாரம் ........ 13

**தொடர்ச்சிகள் மற்றும் தொடர்ச்சியின்மைகள் ........ 18**

- **சகாப்த பரிசீலனைகள் ........ 20**
    - தொடர்ச்சிகள் ........ 20
    - தொடர்ச்சியின்மைகள் ........ 21
- **கலாச்சார பரிசீலனைகள் ........ 24**
    - தொடர்ச்சிகள் ........ 24
    - தொடர்ச்சியின்மைகள் ........ 26
- **தனிப்பட்ட பரிசீலனைகள் ........ 28**
    - தொடர்ச்சிகள் ........ 29
    - தொடர்ச்சியின்மைகள் ........ 30

**முடிவுரை ........ 32**





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# அறிமுகம்

நீங்கள் எப்போதாவது ஒரு கலைப் படைப்பையோ ஒரு இலக்கியத்தையோ, ஒரு நாடகம் அல்லது ஒரு திரைப்படத்தைப் பற்றியோ தீவிரமாகப் படித்திருந்தால், அதை சாதாரணமாக ரசிப்பதற்கும் அதை கவனமாக ஆராய்வதற்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கக்கூடும் என்பதை நீங்கள் அறிய முடியும். விரிவான ஆராய்ச்சி செய்வது ஒரு கடினமான வேலையாகும். நாம் விரும்பும்போது செய்யும் ஒரு காரியத்திலிருந்தும் விரும்பிய விதத்தில் செய்கிற காரியத்திலிருந்தும் இது முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். ஆனால் முடிவில், ஒரு பொருள் அல்லது பகுதியின் உன்னிப்பான ஆய்விலிருந்து வரும் நல்ல அறிவை சில விஷயங்களால் மாற்ற முடியும் என்பதை நீங்களும் நானும் அறிவோம்.

பல வகைகளில் பார்க்கும்போது, புதிய ஏற்பாட்டைக் கற்றுக்கொள்ளும்போது பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் இந்த வகையான அனுபவத்தையே கொண்டிருக்கிறார்கள். இந்த வேத வசனங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக அல்லது நாம் நினைக்கிறபோதெல்லாம் படிக்கும்போது அதில் ஒரு மகிழ்ச்சி இருக்கிறதென்று நமக்குத் தெரியும். ஆனால் புதிய ஏற்பாட்டையும் அதிலுள்ள இறையியலையும் கவனத்துடன் படிக்கும்போது நாம் பெறுகிற அறிவு ஒரு பெரிய நிறைவேறுதலின் ஆதாரமாக இருக்கிறது.

*புதிய ஏற்பாட்டில் ராஜ்யமும் உடன்படிக்கையும்* என்பதே நாம் கற்றுக்கொள்ளப் போகிற முதல் பாடம் ஆகும். இந்த தொடரில் நாம் இறையியலின் பாரம்பரியமான வரையறை என்னவென்று கற்றுக்கொள்வோம் மற்றும் புதிய ஏற்பாட்டு இறையியலைப் பற்றிப் பேசுவோம், தேவன் மற்றும் தேவனுடன் சம்பந்தப்பட்ட காரியங்களைப் பற்றி புதிய ஏற்பாடு என்ன போதிக்கிறது என்றும் கற்றுக்கொள்வோம். புதிய ஏற்பாட்டு இறையியலை நாம் ஏன் கற்றுக்கொள்ள வேண்டும்? என்பது தான் இந்த முதல் பாடத்தின் தலைப்பாகும். புதிய ஏற்பாட்டைப் பற்றிய சாதாரண அறிவு இருந்தால் மட்டும் போதாது, இன்னும் மேலே சென்று புதிய ஏற்பாட்டு இறையியலை கவனமாகவும் ஆழமாகவும் கற்றுக்கொள்வதற்கு நம்மை அர்ப்பணிப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் இந்த பாடத்தில் கற்றுக்கொள்ளப் போகிறோம்.

2 தீமோத்தேயு 2:15 இல், புதிய ஏற்பாட்டு இறையியலைப் புரிந்துகொள்வதற்கு பெரும்பாலும் கடின உழைப்பு தேவைப்படுகிறது என்கிற உண்மையை அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிட்டார். தீமோத்தேயுவிடம் பவுல் கூறினதை கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு (2 தீமோத்தேயு 2:15).

புதிய ஏற்பாட்டு இறையியலில் உள்ள பல பரிமாணங்கள் நிச்சயமாகவே மிகவும் எளிமையானவைகளாக இருக்கின்றன. ஆனால் வேதாகமத்தை புரிந்து கொள்ளுதல் எப்பொழுதும் அவ்வளவு எளிதில்லை என்பதை பவுல் தெளிவாக கூறியிருக்கிறார். “சத்திய வார்த்தையை சரியாக கையாளக்கூடிய ஒரு ஊழியக்காரனாக” தீமோத்தேயு இருந்தார். “*எர்கடேஸ்” என்கி*ற கிரேக்க பதத்திலிருந்து தான் “ஊழியக்காரன்” என்கிற வார்த்தை வருகிறது. இந்தப் பதம் பெரும்பாலும் உடல் ரீதியாக உழைக்கக்கூடிய வேலையாட்களைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டின் இறையியலைப் புரிந்துகொள்வதற்கு பெரும்பாலும் கடின உழைப்பு தேவை என்பதை பவுலின் உவமை சுட்டிக்காட்டியது. புதிய ஏற்பாட்டு இறையியலைப் படிப்பது மிகவும் கடினம் என்றால், நாம் அதை ஏன் படிக்க வேண்டும்?

> பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய கடிதத்தில், வேதவாக்கியங்கள் தேவ ஆவியினால் அருளப்பட்டவை என்றும் அவை “தேவனின் நாசியிலிருந்து வந்தவை” என்றும் கூறுகிறார் - ஆனால் சில வாக்கியங்களுக்குப் பிறகு சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு என்றும் பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார். வேதவாக்கியங்கள் உண்மையிலேயே நமக்கும் தேவனுக்குமிடையிலான ஒரு உடன்படிக்கை உறவையும், அவர் நம்மிடம் உரையாடுவதற்கான அவருடைய கிருபையின் முன்முயற்சியையும், நம்முடைய பொறுப்பையும் மற்றும் அவருடைய வார்த்தைக்கு நாம் எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பதையும் பிரதிபலிக்கின்றன. நாம் புரிந்துகொள்ளுகிற மொழியில் அவருடைய வார்த்தையை நமக்குத் தந்தபடியால் இலக்கிய நடை, மொழி, அக்கால மக்கள் மற்றும் இடங்களைப் பற்றி நன்கு தெரிந்த வடிவங்களைப் பயன்படுத்துவதில் மனித எழுத்தாளர்கள் மூலம் பேசுவதற்கு அவர் தன்னை ஆட்படுத்தினார் - நாம் கற்றுக்கொள்ளும்போது அந்த மொழி, இலக்கியநடை எவ்வாறு இயங்குகிறது என்பதையும் வரலாற்றுக் கதை எவ்வாறு செய்யுளிலிருந்து அல்லது தனிப்பட்ட கடிதத்திலிருந்து வேறுபடுகிறது என்பதையும் அறிந்து கொள்ள கடினமாக உழைக்க வேண்டும். ஏனெனில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இந்த வெவ்வேறு வடிவங்கள் வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. சூழலை அறிந்து வேதத்தை வாசிக்க, புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் முந்தைய நூல்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதன் அடிப்படையில் அந்தக் காலத்திற்கு பொதுவானதாக இருந்த வெவ்வேறு வழிகளில் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதும் முக்கியம். வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டவை என்று பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுகிறார், நாமும் தீமோத்தேயுவைப் போல - சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறதற்கும் தேவனுக்கு முன்பாக தன்னை உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருப்பதற்கும் கடினமாக உழைக்க வேண்டும்.
>
> – Dr. கிரெக் பெர்ரி

புதிய ஏற்பாட்டு இறையியலை ஏன் படிக்க வேண்டும் என்பதை நாம் இரண்டு வழிகளில் ஆராய்ந்து பார்ப்போம். புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் அருளப்பட்டது பற்றியும் அதன் அதிகாரத்தைப் பற்றியும் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தைக் குறித்து முதலில் ஆராய்ந்து பார்ப்போம். இரண்டாவதாக, புதிய ஏற்பாட்டின் நாட்களுக்கும் நம் நாளுக்கும் இடையிலான தொடர்ச்சிகள் மற்றும் தொடர்ச்சியின்மைகளைக் கையாள்வதற்கான சவாலை நாம் ஆராய்ந்து பார்ப்போம். புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் அருளப்படுதல் மற்றும் அதன் அதிகாரம் தொடங்கி இந்த இரண்டு பிரச்சனைகளையும் இன்னும் தெளிவாகப் பார்ப்போம்.

# பரிசுத்த ஆவியானவரால் வேதம் அருளப்படுதல் மற்றும் வேத அதிகாரம்

வேதம் தேவ ஆவியானவரால் அருளப்படுதல் மற்றும் அதன் அதிகாரம் பற்றி தெளிவாக ஆராய்ச்சி செய்வதற்கு, புதிய ஏற்பாடு தேவ ஆவியால் அருளப்பட்டது மற்றும் அதிகாரமுடையது என்பதற்குத் தேவையான வேத ஆதார வசனங்களை உறுதிப்படுத்த வேண்டும். பின்னர் “தேவ ஆவியினால்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அருளப்படுதல்” மற்றும் “அதன் அதிகாரம்” என்பவற்றின் அர்த்தங்கள் என்ன என்பதற்குத் தேவையான விளக்கங்களை வழங்குவோம். இந்த இரண்டு முக்கியமான கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்குத் தேவையான வேத வசன ஆதாரங்களுடன் தொடங்குவோம்.

## உறுதிப்பாடுகள்

வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் மற்றும் புதிய ஏற்பாட்டின் அதிகாரம் ஆகியவற்றைக் குறித்து கிறிஸ்தவர்கள் சிந்திக்கும்போது அப்போஸ்தலனாகிய பவுல் 2 தீமோ 3:16 இல் எழுதிய வசனத்தைத் தான் பார்க்கிறார்கள்.

> வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோத்தேயு 3:16).

“வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது” அல்லது “தேயோப்நிஸ்டோஸ்” என்கிற கிரேக்க வார்த்தை “தேவனால் மூச்சு விடப்பட்டு” என்று மொழிப்பெயர்க்கப்படுவதையோ நாம் கவனிக்கும்போது, வேதம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருப்பதைக் குறித்துப் பவுல் பேசுவதை நாம் அறிகிறோம். வேத வாக்கியங்கள் “உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது” என்று சொல்லும்போது வேத வாக்கியங்களின் அதிகாரத்தையும் அவர் குறிப்பிடுகிறார். புதிய ஏற்பாட்டைப் பற்றி கிறிஸ்துவின் சீஷர்கள் என்ன நம்புகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கு இது முக்கியமான வேத பகுதியாகும். 2 தீமோத்தேயு 3:15 இல் பவுல் தீமோத்தேயுவிடம் கூறியதைக் கவனியுங்கள்:

> கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும் (2 தீமோத்தேயு 3:15).

பவுலின் மனதில் இருந்த மற்றும் “சிறுவயது முதல்” தீமோத்தேயு அறிந்திருந்த “பரிசுத்த வேத எழுத்துக்கள்” புதிய ஏற்பாடு அல்ல, அது பழைய ஏற்பாடு ஆகும். புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் அருளப்பட்டது பற்றியும் அதன் அதிகாரம் பற்றியும் பேசும்போது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் பழைய ஏற்பாட்டைக் குறித்து பவுல் சொன்னதை ஏன் சார்ந்திருக்கிறார்கள்?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புதிய ஏற்பாடு தேவ ஆவியால் அருளப்பட்டது மற்றும் அதன் அதிகாரம் பற்றி நிரூபிப்பதற்கு நாம் மூன்று வேதாகம உறுதிப்பாடுகளைப் பார்க்கப் போகிறோம். முதலில் பன்னிரண்டு சீஷர்களை இயேசு அழைத்ததைப் பார்க்கப் போகிறோம். இரண்டாவது, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் அடித்தள பங்கைப் பற்றி சிந்திக்கப் போகிறோம். மூன்றாவது, புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் தேவ ஆவியினால் அருளப்பட்டது பற்றியும் அவைகளின் அதிகாரம் பற்றியும் உறுதி செய்யப் போகிறோம். முதலில் பன்னிரண்டு சீஷர்களை இயேசு அழைத்ததின் அடிப்படையில் புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் அருளப்பட்டதைப் பற்றியும் அதன் அதிகாரத்தைப் பற்றியும் பார்ப்போம்.

## பன்னிரண்டு சீஷர்கள்

இஸ்ரவேலில் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இயேசு தேவனுடைய மக்களில் ஒரு புதிய மீதியானவர்களை நிறுவத் தொடங்கியபோது, அவர் பன்னிரண்டு சீஷர்களைக் கொண்ட ஒரு சிறப்புக் குழுவை அழைத்தார். இயேசு இந்தப் பன்னிரண்டு சீஷர்களையும் தம்மைப் பின்பற்றிய பிற மக்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டினார் என்பதை சுவிசேஷ புத்தகங்கள் தெளிவுபடுத்துகின்றன. இந்த வேறுபாடானது யூதாஸைத் தவிர, அவர் பின் நாட்களில் தமது அதிகாரப்பூர்வ அப்போஸ்தலர்களாக உலகத்திற்குள் அனுப்பியவர்களை உருவாக்கியது.

யோவான் 16:13 இல் இயேசு தம் பன்னிரெண்டு சீஷர்களை நோக்கி இவ்வாறு கூறுகிறார்:

> சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் (யோவான் 16:13).

இயேசுவின் சீஷர்கள் அதிகம் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது என்பதை இந்த வேத பகுதி கூறுகிறது. “சத்திய ஆவியாகிய” அவர் வரும்போது, “வரப்போகிற காரியங்களைக் குறித்து” “சகல சத்தியத்திற்குள்ளும்” [அவர்களை] நடத்துவார். இயேசு தேர்ந்ததெடுத்த தம்முடைய சீஷர்களை பரிசுத்த ஆவியின் மூலம் தன் மற்ற சீஷர்களுக்கு கற்பிக்க நியமித்ததை இங்கே காண்கிறோம். இதுவும் இதனோடு ஒத்த மற்ற வேத பகுதிகளும் புதிய ஏற்பாடு தேவ ஆவியால் அருளப்பட்டது என்கிற நம் நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றன.

புதிய ஏற்பாட்டில் அதிக புத்தகங்களை எழுதிய அப்போஸ்தலனாகிய பவுல் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு பேரில் ஒருவர் இல்லை. ஆனால் பவுலும் அதிகாரமுள்ள அப்போஸ்தலன் தான் என்று வேதம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தெளிவாகக் கூறுகிறது, அப் 1:21-22 இல் அப்போஸ்தலர்களாக நியமிக்கப்பட்ட பன்னிரெண்டு பேர்களுக்கு இணையான தகுதிகள் பவுலுக்கும் இருந்தன, அப் 1:21-22. தமஸ்குவுக்கு செல்லுகிற சாலையில் பவுல் இயேசுவை சந்தித்ததை லூக்கா இதனால் தான் மூன்று முறை கூறுகிறார்: முதலில் அப் 9:1-19, பின்னர் 22:6-11, மற்றும் 26:9-18. அரேபியாவில் உள்ள வனாந்தரத்தில் பவுல் கிறிஸ்துவுடன் மூன்று வருடங்கள் இருந்தார் என்று கலாத்தியர் 1:11–2:10 கூறுகிறது. எருசலேமில் உள்ள அப்போஸ்தலர்கள் பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தை உறுதிப்படுத்தியதாகவும் இதே வேதபகுதி தெரிவிக்கிறது. 1 கொரிந்தியர் 15:8-9 இல் பவுல் இவ்வாறு சொல்கிறார், அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமான பின்பு:

> அகாலப்பிறவிபோன்ற எனக்கும் [இயேசு] தரிசனமானார். நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல (1 கொரிந்தியர் 15:8-9).

“அகாலப்பிறவி” என்றும் “அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவன்” என்றும் பவுல் தன்னை சொல்லிக் கொண்டார். இயேசு பூமியில் ஊழியம் செய்த போது அவருடன் இருந்திராத ஒரே அதிகாரப்பூர்வ அப்போஸ்தலன் அவர் தான். ஆனால் பவுல் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு ஒரு சாட்சியாக இருந்து, எருசலேமில் இருந்த முதல் அப்போஸ்தலர்களால் அங்கீகரிக்கப்பட்டார்.

இயேசு தம்முடைய பன்னிரெண்டு சீஷர்களை அழைத்ததோடு தொடர்பான உறுதிமொழிகளை மனதில் கொண்டு, கிறிஸ்துவின் முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் தூண்டுதல் மற்றும் அடிப்படை அதிகாரத்தையும் நாம் குறிப்பிட வேண்டும்.

## அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்

எபேசியர் 3:4-5 இல் தேவனுடைய விசேஷித்த வெளிப்பாட்டை தான் மட்டுமல்ல கிறிஸ்துவின் எல்லா அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் பெற்றார்கள் என்கிற விதமாய் பவுல் சொல்வதை கவனியுங்கள்:

> இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (எபேசியர் 3:4-5).

அவை “தேவனுடைய பரிசுத்த அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியினால் வெளிப்படுத்தப்படும் வரை” இரகசியமாக வைக்கப்பட்டிருந்த கிறிஸ்தவ போதனைகளை அல்லது “மர்மம்” என்று பவுல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இங்கே குறிப்பிட்டார். ஆகவே, எபேசியர் 2:20-21 இல் பவுல் முதல் நூற்றாண்டின் அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் இவ்வாறு குறிப்பிட்டார் என்பதில் ஆச்சரியமில்லை:

> [சபை] அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டது; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது (எபேசியர் 2:20-21).

தேவன் சபையை “கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக” கட்டுகிறார் மற்றும் “அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்” என்று இந்த வேத பகுதி கூறுகிறது. பவுல் “அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும்” சபையுடைய “அஸ்திபாரத்தின்” ஒரு பகுதியாக அடையாளம் கண்டார் என்பதையும் கவனியுங்கள். அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் அதிகாரப்பூர்வ போதனைகளின் அடிப்படையில் தேவன் கிறிஸ்துவின் சபையை ஸ்தாபித்தார் என்பதை இது குறிக்கிறது. நாம் முந்தைய வசனத்தில் பார்த்தது போல அப்போஸ்தல மற்றும் தீர்க்கதரிசன போதனைகள் அதிகாரமுடையவையாக இருந்தன. ஏனென்றால் அவைகள் ஆவியானவரால் அருளப்பட்டவையாக இருந்தன.

இயேசுவின் பன்னிரெண்டு சீஷர்களைப் பற்றிய வேதாகம உறுதிமொழிகளுக்கும், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் அஸ்திபார அதிகாரத்திற்கும் மேலதிகமாக, புதிய ஏற்பாட்டு புத்தகங்களை பழைய ஏற்பாட்டு வேதவசனங்களுக்கு சமமானதாக அப்போஸ்தலர்கள் கருதினார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த வகையான பார்வை புதிய ஏற்பாட்டின் பல இடங்களில் தோன்றுகிறது.

## புதிய ஏற்பாட்டு புத்தகங்கள்

ஆரம்பமாக, 1 தீமோத்தேயு 5:18 இல் பவுல் இவ்வாறு எழுதினர்:

> “போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக” என்றும், “வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே” (1 தீமோத்தேயு 5:18).

இந்த வசனம் முதலில் நமக்கு விசித்திரமாக தோன்றலாம், ஆனால் நம் விவாதத்திற்கு இது முக்கியமானது, ஏனெனில் பவுல் “வேதம் கூறுகிறது” என்று தொடங்குகிறார். பின்னர் அவர் இரண்டு வெவ்வேறு வேத பகுதிகளை மேற்கோள் காட்டினார். முதல் மேற்கோளான, “போரடிக்கிற மாட்டை வாயைக் கட்டாதே” என்பது பழைய ஏற்பாட்டில், உபாகமம் 25: 4 யைக் குறிக்கிறது. ஆனால் இரண்டாவது மேற்கோளான, “கூலியாள் தன் வேலைக்குப் பாத்திரன்”



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்பது புதிய ஏற்பாட்டில் லூக்கா 10:7 இல் இருந்து எடுக்கப்பட்டதாகும். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு அதிகாரத்திற்கு இடையிலான இந்த தொடர்பானது, அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களை பழைய ஏற்பாட்டு வேதவசனங்களுக்கு சமமாக கருதினார் என்பதைக் காட்டுகிறது.

2 பேதுரு 3:15-16 இல் இதைப் போல இன்னொன்றைப் பார்க்க முடியும். அங்கே அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வாறு கூறினார்:

> பவுலும்.... தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்...அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள் (2 பேதுரு 3:15-16).

“தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே” பவுல் எழுதினார் என்று பேதுரு இந்த வேத பகுதியில் ஒப்புக்கொண்டார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பவுலின் புத்தகங்கள் தேவனின் அதிகாரத்தைக் கொண்டுள்ளன. கிறிஸ்தவ விசுவாசத்தை எதிர்ப்பவர்கள் பவுலின் நிருபங்களை “மற்ற வேதவசனங்களைப் போலவே” புரட்டினார்கள் என்பதை பேதுரு சுட்டிக்காட்டியதையும் கவனியுங்கள். பேதுருவின் நிருபங்களின் பெரிய சூழலிலுள்ள, “மற்ற வேத வாக்கியங்கள்” பழைய ஏற்பாட்டின் வேத வாக்கியங்கள் ஆகும். ஆகவே, புதிய ஏற்பாட்டின் எழுத்துக்களும் பழைய ஏற்பாட்டின் எழுத்துக்களைப் போல ஆவியானவரால் அருளப்பட்டவையாகவும் அதிகாரமும் கொண்டதாகவும் இருக்கின்றன என்று பேதுரு கருதினார் என்பதை இங்கே காண்கிறோம்.

சபைக்காக, புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் அருளப்பட்டதாகவும் அதிகாரம் உடையதாகவும் இருக்கின்றது என்று வேதம் உறுதிப்படுத்துகிறது. ஆவியானவர் தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு போதிப்பார் என்று இயேசுவே வாக்குத்தத்தம் செய்தார். அவர் தனது அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் தனது சபையின் அஸ்திபார அதிகாரங்களாக ஸ்தாபித்தார். இதோடு கூட, தேவனுடைய மக்கள் பழைய ஏற்பாட்டு வேத வசனங்களை ஆவியானவரால் அருளப்பட்டவைகளாகவும் அதிகாரப்பூர்வ வார்த்தையாகவும் பெற்றதைப் போலவே, கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களை ஆவியானவரால் அருளப்பட்டவைகளாகவும் அதிகாரப்பூர்வ வார்த்தையாகவும் பெற்றுக்கொள்ள சபையானது அழைக்கப்பட்டது.

புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் அருளப்பட்ட தைக் குறித்தும் அதன் அதிகாரம் குறித்தும் நமது நம்பிக்கை வேதாகமத்தில் உள்ள பல



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உறுதிமொழிகளால் எவ்வாறு ஆதரிக்கப்படுகிறது என்பதைப் பார்த்த பிறகு, இந்த பதங்களின் அர்த்தம் என்ன என்பதற்கான சில விளக்கங்களை வழங்க வேண்டும்.

# தெளிவுபடுத்தல்கள்

புதிய ஏற்பாட்டில் உள்ள “வேதம் ஆவியினால் அருளப்படுதல்” மற்றும் “அதிகாரம்” என்ற சொற்களை கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தவறாக புரிந்துகொள்கிறார்கள். எனவே, இந்த கருத்துக்கள் உண்மை என்பதை உறுதிப்படுத்துவது எவ்வளவு முக்கியமோ, அதே முக்கியத்துவத்தை அவற்றை நாம் சரியாக புரிந்துகொள்கிறோம் என்பதிலும் காட்ட வேண்டும்.

புதிய ஏற்பாட்டின் இந்த இரண்டு குணாதிசயங்களுக்கான தெளிவுபடுத்தல்களை தனித்தனியாக பார்ப்போம். முதலில் புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் அருளப்பட்டது என்பதன் விளக்கத்தையும் புதிய ஏற்பாட்டின் அதிகாரம் என்பதன் விளக்கத்தையும் பார்ப்போம். முதலில் புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் அருளப்பட்டது என்பதன் விளக்கத்தைப் பார்க்கலாம்.

## வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல்

வரலாறு முழுவதும், கிறிஸ்துவின் சீஷர்கள் எனக் கூறுபவர்கள், புதிய ஏற்பாடு தேவ ஆவியினால் அருளப்பட்டது அல்லது தேவனால் வேதம் “மூச்சு விடப்பட்டு” என்று சொல்வதன் அர்த்தம் குறித்து வெவ்வேறு புரிதல்களைக் கொண்டிருந்தனர். ஒரு தொடர்ச்சி அல்லது அலைமாலையாக இந்த கண்ணோட்டங்களை சிந்திப்பதற்கு இது உதவுகிறது.

ஒரு முனையில், சில இறையியலாளர்கள் வேதம் ஆவியானவரால் அருளப்படுவதைப் பற்றிய அன்பின் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கிறார்கள். உலகப் பிரகாரமான கவிஞர்கள் அல்லது இசைக்கலைஞர்கள் எழுதத் தூண்டப்படுவதைப் போலவே பரிசுத்த ஆவியானவர் வேத எழுத்தாளர்களை தூண்டினார் என்று அவர்கள் நம்புகிறார்கள். இதன் விளைவாக, புதிய ஏற்பாடு அதன் மனித எழுத்தாளர்களின் தனிப்பட்ட பிரதிபலிப்புகள் மற்றும் கருத்துக்களை மட்டுமே கொண்டுள்ளது என்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்த எழுத்தாளர்கள் புத்திசாலித்தனமாக இருந்திருக்கலாம், நமக்கு உதவக்கூடிய தகவல்களை அவர்கள் பெற்றுத்தர வழிவகை செய்திருக்கலாம் என்று அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் புதிய ஏற்பாடு என்பது நாம் விசுவாசிப்பதற்கும், உணருவதற்கும், செயல்படுவதற்கும் தேவன் விரும்பிய முழுமையான நம்பகமான பதிவு அல்ல என்று அவர்கள் சொல்கிறார்கள்.

அதன் எதிர்முனையில், பிற இறையியலாளர்கள் இயந்திர முறை (அதாவது எழுத்தாளர்களை பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு வார்த்தையாக சொல்லி எழுத வைத்த முறை) என்று அழைக்கப்படுவதை நம்புகிறார்கள். இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கண்ணோட்டத்தின்படி, வேத எழுத்தாளர்கள் வேதத்தை எழுதியபோது செயலற்றவர்களாக இருந்தனர். பரிசுத்த ஆவியானவர் காரியங்களை சொல்ல சொல்ல, மனித எழுத்தாளர்கள் அவர் சொன்னதை செயலற்ற முறையில் பதிவு செய்தனர். இந்த கண்ணோட்டம் புதிய ஏற்பாட்டின் சத்தியம் மற்றும் அதிகாரத்தை உறுதிப்படுத்துகிறது, ஆனால் மனித எழுத்தாளர்கள் எழுதும் செயல்முறையின் ஒரு முக்கிய அங்கமாக இருந்தார்கள் என்பதை மறுக்கிறது.

இறுதியாக, பெரும்பாலான சுவிசேஷ கிறிஸ்தவர்கள் இயற்கையாக வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் என்கிற கண்ணோட்டத்தை நம்புகிறார்கள். தேவ ஆவியின் செயலையும் வேதத்தை எழுதிய மனித எழுத்தாளர்களின் பணியையும் பிரிக்க இயலாது என்பதை இந்த விளக்கம் குறிக்கிறது. இந்த கண்ணோட்டத்தின் படி, பரிசுத்த ஆவியானவர் மனித எழுத்தாளர்களை எழுத தூண்டி, அவர்களின் வார்த்தைகளை மேற்பார்வையிட்டு அவர்கள் எழுதியவைகளை இயக்கியுள்ளார். இதன் விளைவாக, வேதத்தின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளாக இருக்கின்றன. அதே வேளையில், மனித எழுத்தாளர்களின் ஆளுமைகள், அனுபவங்கள், கண்ணோட்டங்கள் மற்றும் நோக்கங்களை பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தினார். எனவே, வேதத்தின் சொற்களும் அதன் மனித எழுத்தாளர்களின் சொற்களாகவே இருக்கின்றன. இந்த மூன்றாவது கண்ணோட்டம் வேதம் ஆவியானவரால் அருளப்படுதலின் தன்மை பற்றிய வேதத்தின் சொந்த சாட்சியத்தை சிறப்பாக பிரதிபலிக்கிறது.

> “இயற்கையாக வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல்” என்பதன் மூலம்இப்போது நாம் உண்மையில் அர்த்தப்படுத்துவது என்னவென்றால், வேதம் பரலோகத்திலிருந்து நம் மடியில் விழவில்லை அல்லது எழுத்தாளர்கள் தானே இயங்கும் இயந்திரங்கள் இல்லை. … ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவர்களை வழிநடத்தின போது அவர்கள் எழுதினார்கள். இதன் மூலம் நாம் என்ன சொல்கிறோம் என்றால், அது தேவனின் செய்தி என்றாலும், அது உண்மையான சூழ்நிலைகளில் உண்மையான மனிதர்கள் மூலம் எழுதப்பட்டவையாகும். மக்கள் அதைப் பற்றி இப்பொழுது கொஞ்சம் பதட்டமாக உணரலாம். ஒருவேளை தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு நேரடி தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்பதை அவர்கள் அதிகம் விரும்பலாம். உண்மை என்னவென்றால், அதை அறிந்து கொள்வது நமக்கு மிகவும் உதவியாக இருக்கும், ஏனென்றால் நான் வேதத்தைப் படிக்கும்போது, அது தேவனின் செய்தி என்று எனக்குத் தெரியும். அதற்கு இரட்டைப் பண்பு இருக்கிறது. இது தேவனின் செய்தி, ஆனால் என்

> அனுபவத்தைப் புரிந்துகொள்வது மனிதர்கள். அவர்கள் வேத பகுதியைப் படிக்கும் போது எனக்குண்டான அதே அனுபவம் அவர்களுக்கும் கிடைக்கிறது. எனவே, உண்மையில், நம்மிடம் இருப்பது மனித அனுபவத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளும் தேவ ஆவியால் அருளப்பட்ட வார்த்தையாகும். இது தேவன் சொல்ல சொல்ல எழுதப்பட்டதல்ல. இது மனித அனுபவத்தின் போராட்டங்களுடன் எந்த தொடர்பும் இல்லாத ஒரு செய்தி கிடையாது. எனவே, "இயற்கையாக தேவ ஆவியினால் அருளப்படுதல்" என்பதை நாம் அர்த்தப்படுத்தும்போது, உண்மையான சூழ்நிலைகளில், உண்மையான நபர்கள் மூலமாக வந்தது என்கிறோம். எனவே அவர்கள் எழுதும் போது, தேவனின் செய்தியை எழுதுகிறார்கள், ஆனால் வாழும் வாழ்க்கையின் அறிவு, அனுபவம் மற்றும் உணர்ச்சியுடன் எழுதினார்கள்.
>
> – Rev. ரிக் ரோட்ஹீவர்

உதாரணமாக, 2 பேதுரு 3: 15-16 இல் அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதியதை மீண்டும் கேளுங்கள்:

> பவுலும்.... தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்...அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள் (2 பேதுரு 3:15-16).

நாம் முன்பே குறிப்பிட்டபடி, தேவனுடைய ஆவியானவரே பவுல் எழுதிய நிருபங்களை அருளினார் என்பதை பேதுரு ஒப்புக்கொண்டார். ஆனால் இது இயற்கையாக ஆவியானவரால் அருளப்பட்டது என்பதை பேதுரு எவ்வாறு சுட்டிக்காட்டினார் என்பதைக் கவனியுங்கள். "அவருடைய நிருபங்களில் புரிந்துகொள்ள கடினமான சில விஷயங்கள் உள்ளன" என்று பேதுரு எழுதியபோது, பவுலின் பின்னணி, ஆளுமை மற்றும் எழுத்து நடை ஆகியவற்றை அவர் ஒப்புக்கொண்டார். இந்த அறிக்கையானது பவுலின் உயர் மத குருமார்களின் கல்வியை பிரதிபலித்தது. பவுலின் இறையியல் நுட்பம் கலிலேயாவைச் சேர்ந்தவரான படிக்காத மீனவராக இருந்த பேதுருவுக்கு சவாலாக இருந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புதிய ஏற்பாட்டின் இறையியலை அணுகும்போது நாம் பின்பற்ற வேண்டிய ஒரு உதாரணத்தை பேதுருவின் கண்ணோட்டங்கள் நமக்கு அளிக்கின்றன. வேதாகமத்தின் இறையியல் கண்ணோட்டங்கள் தேவ ஆவியினால் அருளப்பட்டவை என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அவை தேவனிடமிருந்து வருவதால் உண்மையானவையாகவும் நம்பகமானவையாகவும் இருக்கின்றன. இருந்தாலும் புதிய ஏற்பாட்டின் இறையியலை ஆராயும்போது மனித எழுத்தாளர்கள் மற்றும் அவர்களின் நோக்கங்களைப் பற்றி அறிய தேவையான முயற்சியை முன்வைப்பதும் முக்கியமானதாகும்.

உண்மையில், இயற்கையாக பரிசுத்த ஆவியானவரால் அருளப்படுதலின் மிக முக்கியமான தாக்கங்களில் ஒன்று என்னவென்றால் புதிய ஏற்பாட்டு இறையியல் பற்றிய நமது படிப்பின் அர்த்தம் ஆகும். வேதம் பரிசுத்த ஆவியானவரால் அருளப்படுதல் பற்றிய ஈர்ப்பு கண்ணோட்ட முறை அல்லது இயந்திர முறையை (அதாவது எழுத்தாளர்களை பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு வார்த்தையாக சொல்லி எழுத வைத்த முறை) நாம் நம்பினால் வேத பகுதியின் அதிகாரத்தை அவமதிக்கவோ அல்லது எழுத்தாளரின் பங்களிப்பைப் புறக்கணிக்கவோ செய்வோம். ஆனால் புதிய ஏற்பாட்டின் இறையியலை குறைந்தது மூன்று நிலைகளில் ஆராய இயற்கையாக ஆவியானவரால் அருளப்படுதல் நம்மைத் தூண்டுகிறது.

வேத பகுதி தான் இதில் முக்கிய மற்றும் மிக வெளிப்படையான நிலை ஆகும். இந்த வெளிப்படையான கூற்றுக்கள் புதிய ஏற்பாட்டு இறையியலைப் பற்றி நமக்கு அதிகம் கற்றுக்கொடுக்கக் கூடும்.

வேத பகுதிக்கு கீழ் உள்ள நிலையில், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் பல மறைமுகமான அல்லது எழுதப்படாத இறையியல் முன்மாதிரிகளை ஆராய நாம் தயாராக இருக்க வேண்டும். எழுத்தாளர்களின் பின்னணியையும் அவர்களின் இறையியல் நம்பிக்கைகளையும் நாம் படிக்க வேண்டும். அவர்களின் பின்னணியும் அவர்களின் நம்பிக்கைகளும் அவர்கள் எழுதியதில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தின என்பதைக் கண்டறிய நாம் நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.

வேத பகுதிக்கு மேலே உள்ள மூன்றாவது நிலையில், எழுத்தாளர்களின் மறைமுக நோக்கங்களையும் நாம் சிந்திக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வேதாகம எழுத்தாளர்கள் தங்களை கேட்பவர்களுக்கு என்ன எழுதவேண்டுமென்று மனதில் கருதினார்கள்? சில நேரங்களில், புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் தாங்கள் எழுதியவர்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்துவதில் நோக்கம் கொண்டிருந்தனர். ஆனால் பெரும்பாலும், தங்கள் பார்வையாளர்கள் தாங்கள் எழுதுகிறவைகளின் தாக்கங்களை அனுமானிப்பார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

இப்போது, நீங்கள் நினைத்துப் பார்க்கிறபடி, புதிய ஏற்பாட்டை நாம் ஆராயும்போது வெளிப்படையான கூற்றுக்கள், இறையியல் முன்மொழிவுகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மற்றும் மறைமுகமான நோக்கங்களை கருத்தில் கொள்வது எப்போதும் எளிதான காரியம் அல்ல. இதற்கு பெரும்பாலும் அதிக கவனமாக படிக்க வேண்டியது அவசியம். ஆனால் இயற்கையாக ஆவியானவரால் அருளப்படுதலின் தன்மையானது புதிய ஏற்பாட்டு இறையியலின் மூன்று நிலைகளையும் ஆராய்வதை நமக்கு அவசியமாக்குகிறது.

புதிய ஏற்பாடு இயற்கையாக ஆவியானவரால் அருளப்படுதல் பற்றி சில விளக்கங்களை நாம் இப்போது பார்த்தோம். புதிய ஏற்பாட்டு வேதவசனங்களின் அதிகாரம் என்றால் என்ன என்பதையும், அந்த அதிகாரத்திற்கு இன்று நாம் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதையும் இப்போது தெளிவுபடுத்துவோம்.

## வேத அதிகாரம்

நம் வாழ்வின் மீது புதிய ஏற்பாட்டிற்கு அதிகாரம் உண்டு என்று அனைத்து சுவிசேஷ சபையாரும் சரியாக நம்புகிறார்கள். ஆனால் இந்த அதிகாரத்தின் தன்மை என்னவென்று புரிந்து கொள்வதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். வருத்தப்படக்கூடிய ரீதியில், பல நல்ல கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாடு அவர்களுக்கு நேரடியாக எழுதப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளத் தவறிவிடுகிறார்கள். இதை வேறு விதமாகக் கூறினால், புதிய ஏற்பாடு நமக்காக எழுதப்பட்டது, ஆனால் நமக்கு நேரடியாக எழுதப்படவில்லை. புதிய ஏற்பாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டு அந்த நாட்களில் வாழ்ந்த மற்றவர்களுக்கு வழங்கப்பட்டது என்பது நமக்குத் தெரியும். ஆனால் இந்த உண்மை பெரும்பாலும் புதிய ஏற்பாட்டின் அதிகாரத்தை நாம் உணர்ந்து கொள்ளும் வழிகளில் சிறிதளவு தாக்கத்தை மட்டுமே ஏற்படுத்துகிறது. இவை அனைத்தும் புதிய ஏற்பாட்டின் அதிகாரத்தைப் பற்றி மிக முக்கியமான ஒன்றைக் கூறுகின்றன: புதிய ஏற்பாட்டு இறையியல் இன்று கிறிஸ்துவின் சீஷர்களின் வாழ்க்கையில் முழு அதிகாரத்தைக் கொண்டுள்ளது, ஆனால் அது மறைமுகமான அதிகாரமாக இருக்கிறது. இந்த உண்மையின் அர்த்தம் என்னவென்றால், புதிய ஏற்பாட்டு வேதபகுதிகள் அவற்றின் முதல் பார்வையாளர்களிடம் பேசியது என்ன என்பதைப் பற்றி முடிந்தவரை கற்றுக்கொள்ள நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

கிறிஸ்துவின் சீஷர்கள் முதலில் புதிய ஏற்பாட்டைப் படிக்கத் தொடங்கும் போது, அவர்கள் வழக்கமாக அதன் அடிப்படை போதனைகளை நோக்கித் தான் ஈர்க்கப்படுவார்கள். “இயேசுவே கர்த்தர்”, “மனந்திரும்புங்கள், சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்,” “ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துங்கள்”, போன்ற உபதேசங்களையும் பிற அத்தியாவசிய உபதேசங்களையும் அவர்கள் வாசிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் வரலாற்று சூழ்நிலைகள், ஆளுமைகள் மற்றும் நோக்கங்களைப் பற்றி அவர்கள் அதிகம் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. எல்லா நடைமுறை நோக்கங்களுக்காக, இந்த அடிப்படை போதனைகளை காலத்திற்கு அப்பாற்பட்ட உண்மைகளாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கருதலாம். புதிய ஏற்பாட்டின் அதிகாரத்திற்கு கீழ்படிவதன் தாக்கங்களை அவர்கள் எப்போதாவது தான் அதிகம் கையாளுகிறார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டு இறையியலைப் பற்றி நாம் மேலும் அறியும்போது, அவற்றின் அதிகாரத்தை இன்று சரியாக ஒப்புக் கொள்வதற்கு புதிய ஏற்பாட்டு வேத பகுதிகளின் அப்போதைய உண்மைச் சூழல்களை நாம் கவனமாகப் பார்க்க வேண்டும். எழுத்தாளர்களின் பின்னணி, சூழ்நிலைகள் மற்றும் நோக்கங்களைப் பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் வாழ்வின் மீதான புதிய ஏற்பாட்டின் அதிகாரத்திற்கு நம்மை சரியான முறையில் சமர்ப்பிக்க முடியும்.

> நமக்கு வருகிற கேள்விகளில் ஒன்று என்னவென்றால், மற்றவர்களுக்காக எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டை நமக்கு எவ்வாறு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்வது? முதலில், ஒப்புதலுக்கு கட்டாயப்படுத்தும் உரிமை அல்லது அதிகாரம் அதற்கு உள்ளது என்ற அர்த்தத்தில் இது அதிகாரப்பூர்வமானது. முதன் முதலாக வேதாகமத்தைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் நமக்கும் இடையே இரண்டு இணைப்புகள் இருக்கின்றன. முதலாவதாக, இந்த வேதபகுதியின் எழுத்தாளரான தெய்வீக எழுத்தாளர் நேற்றும், இன்றும் என்றென்றும், மாறாதவராக இருக்கிறார். நாம் இடைபட வேண்டியவரும் அவர் தான். இரண்டாவதாக, இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாகிய நாம் தேவனின் உடன்படிக்கை மக்களுக்குரிவர்களாக இருக்கிறோம், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நம் உறுப்பினர்களில் சிலரிடம் குறிப்பாகச் சொல்லப்பட்ட விஷயங்கள் நமக்கும் பொருந்துவதாக இருக்கின்றன. ஏனென்றால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நமக்கும் அவர்களுடன் பங்கு இருக்கிறது.
>
> – Dr. கிளன் ஜி. ஸ்கோர்கி

நம் மனதில் இருப்பதை தெளிவுபடுத்துவதற்கு ஒரு ஒப்புமை உதவும். ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் மீது முழு அதிகாரத்தை, ஆனால் பெரும்பாலும் மறைமுகமான அதிகாரத்தை எவ்வாறு செலுத்துகிறார்கள் என்பதை நன்கு அறிவார்கள். தவறான காரியத்தை செய்த தன் மகனையோ மகளையோ ஒரு பெற்றோர் திட்டி, “போய் உட்கார்ந்து நீ என்ன செய்தாய் என்று சிந்தித்துப் பார்” என்று சொல்வதை கற்பனை செய்து பாருங்கள். அவனது சகோதரியோ தொடர்ந்து விளையாடுவதில் மகிழ்ச்சியாய் இருக்கிறாள். எல்லாவற்றிற்கும் மேலாக, பெற்றோர் அவளுடன் பேசவில்லை. ஆனால் அந்த சகோதரி பெற்றோருக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இன்னும் கீழ்ப்படியவில்லை என்றால், அந்த பெற்றோர் "உன் சகோதரனுக்கு என்ன நடந்தது என்று நீ பார்க்கவில்லையா?" என்பார்கள். இது போன்ற சூழ்நிலைகளில், பெற்றோர்கள் மற்ற குழந்தைகள் அனைவரும் தாங்கள் ஒரு குழந்தையுடன் நடந்து கொண்ட விதத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். மற்ற குழந்தைகளிடம் ஒழுங்கு நடவடிக்கை நடத்தப்படாவிட்டாலும், அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை இந்த மறைமுக அதிகாரம் குழந்தைகள் அனைவருக்கும் கற்பிக்கிறது.

இயற்கையாக தேவ ஆவியினால் அருளப்படுதலானது கிறிஸ்துவை தற்போது பின்பற்றுபவர்களை புதிய ஏற்பாட்டின் முழு அதிகாரத்திற்குள்ளாக, அதாவது மறைமுக அதிகாரத்திற்குள்ளாக வழிநடத்துகிறது என்று நாம் கூறுவதன் அர்த்தம் இது தான். புதிய ஏற்பாட்டு வேத பகுதிகள் முதலாவது பார்வையாளர்களிடம் முழு அதிகாரத்துடன் நேரடியாகப் பேசப்பட்டன. அவைகள் இன்றும் முழு அதிகாரத்துடன் பேசுகின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களைப் பொறுத்தவரையில், புதிய ஏற்பாட்டின் போதனைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டுமா என்கிற கேள்வியே இருக்கக்கூடாது. அதன் அதிகாரத்திற்கு நாம் எப்படி கீழ்படிய வேண்டும் என்பது மட்டுமே நம் கேள்வியாக இருக்க வேண்டும். எனவே, இந்த அதிகாரத்திற்கு நாம் எவ்வாறு கீழ்படிய வேண்டும் என்பதை தீர்மானிக்க, ஒரு குறிப்பிட்ட வேத பகுதி எழுதப்பட்டபோது அதன் உண்மையான நோக்கம் மற்றும் சூழ்நிலைகளை திரும்பிப் பார்க்க நாம் தயாராக இருக்க வேண்டும்.

> தேவனுடைய வார்த்தையைப் பற்றி மாணவர்கள் அடிக்கடி கேட்கும் கேள்விகளில் ஒன்று, 2,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட செய்தி நமக்கு எவ்வாறு பொருந்தும்? இது எப்படி நமக்கு தேவனுடைய வார்த்தையாக இருக்க முடியும்? இங்கே நமக்கு இருக்கிற முக்கிய திறவுகோல் என்னவென்றால், இந்த வேத பகுதிகள் நமக்கு நேரடியான தேவ வார்த்தை இல்லை என்றாலும், அவை நமக்காக கொடுக்கப்பட்ட தேவ வார்த்தையாகும். வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு புத்தகமும், ஒவ்வொரு இலக்கிய நடையும், ஒவ்வொரு சூழ்நிலையும் பொதுவான ஒரு காரியத்தைக் கொண்டுள்ளது. அது என்னவென்றால்,வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் தேவன் யார் மற்றும் அவரின் குணாதிசயம் என்ன என்பதை வெளிப்படுத்துகிறது. அவருடைய உறவுடன் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நாம் யாராக இருக்கிறோம் என்பதையும் வெளிப்படுத்துகிறது. உலகில் நமக்கான தேவனின் நோக்கத்தையும், நாம் அவருக்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டும் மற்றும் நாம் மற்ற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மனிதர்களுக்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதையும் இது வெளிப்படுத்துகிறது. ஆகவே, இறுதியில், வேதத்தில் நாம் கற்றுக்கொள்வது என்பது தேவனின் இருதயத்தைக் கற்றுக்கொள்வதாகும். தேவனின் தன்மையையும் நோக்கத்தையும் கற்றுக்கொள்கிறோம். வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு நபர்களுக்கு இது எழுதப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு வழங்கப்பட்ட நேரடி கட்டளைகள் நமக்கு நேரடியாகப் பொருந்தாது என்றாலும், தேவனின் குணாதிசயம், தேவனின் நோக்கம், நாம் யார் மற்றும் தேவனுடைய உறவில் நாம் எப்படி வாழ வேண்டும் ஆகியவற்றைக் கற்றுக்கொள்கிறோம். ஆகவே, இறுதியில், தேவனின் இருதயத்தையும் நோக்கத்தையும் வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது, அவருடன் நாம் எப்படி உறவு கொள்ள முடியும் என்றும் ஒருவருக்கொருவர் உறவில் எவ்வாறு வாழ வேண்டும் என்றும் இது வழிகாட்டுகிறது.
>
> – Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

உதாரணமாக, மத்தேயு 19: 21 இல், பணக்கார இளம் ஆட்சியாளருக்கு இயேசு இந்த குறிப்பிட்ட அறிவுரையைக் கொடுத்தார்:

> நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றிவா (மத்தேயு 19:21).

இந்த வேத பகுதியை நம் வாழ்வில் எவ்வாறு செயல்முறைப்படுத்துவது? நாம் அனைவரும், ஒவ்வொரு சூழ்நிலையிலும், "[நம்] உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடுப்பதா"? இந்த கேள்விக்கு நாம் பொறுப்புடன் பதிலளிக்கக்கூடிய ஒரே வழி, இந்த பணக்கார இளம் ஆட்சியாளர் யார் என்பதையும், இயேசு ஏன் அவருக்கு இப்படி பதிலளித்தார் என்பதையும் புரிந்துகொள்வதுதான்.

இந்த மனிதனின் பட்டமும் இயேசுவுடன் அவர் பேசிய விதமும் அவர் யூதப் பின்னணியைச் சேர்ந்தவர் என்பதையும் அவருடைய சமூகத்தில் நல்ல பணக்காரராக இருந்ததையும் குறிக்கிறது. யூத பழக்கவழக்கங்களை கைக்கொள்வதில் அவர் ஆழ்ந்த அக்கறை காட்டியதாகவும் தெரிகிறது. முன்னதாக இந்த அதிகாரத்தில் அவர் இயேசுவிடம், "போதகரே, நித்திய ஜீவனைப் பெற நான் என்ன நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "கட்டளைகளுக்குக் கீழ்ப்படி" என்று பதிலளித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தான் இதைச் செய்துவிட்டதாக அந்த இளைஞன் பெருமையுடன் அறிவித்தார். மனிதனின் முக்கிய அக்கறையாக செல்வம் மற்றும் செல்வாக்கு இருப்பதாக தோன்றுவதால் இயேசு அதைப் பற்றி பேசினார்.

உடைமைகளை வைத்திருப்பது தீங்கு அல்ல என்பதை வேதம் மீண்டும் மீண்டும் நமக்குக் காட்டுகிறது. இயேசுவுக்கு சீஷனாக இருப்பதற்கும் அது ஒரு தடை கிடையாது. இருப்பினும், இயேசுவின் சீஷர்களாக,தேவனைச் சேவிப்பதற்காக நம்முடைய ஆசைகளை கைவிட நம் இருதயமானது எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

இதற்கு மற்றொரு எடுத்துக்காட்டு அப்போஸ்தலர் 5:1-11 இல் உள்ளது. அனனியாவும் சப்பீராளும் தங்கள் பணத்தை சபைக்கு கொடுப்பதாக பாசாங்கு செய்கிறார்கள், ஆனால் சிலவற்றை ரகசியமாக தங்களுக்காக வைத்திருக்கிறார்கள். அவர்கள் வைத்திருந்த அனைத்தையும் அவர்கள் கொடுக்கவில்லை என்பது அவர்களின் பாவமல்ல - அவர்களிடம் அவ்வளவும் கேட்கப்படவுமில்லை - மாறாக மக்கள் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தங்கள் தாராள மனப்பான்மையைப் பற்றி பொய் சொன்னார்கள்.

பணக்கார இளம் ஆட்சியாளரிடம் தன்னுடைய உடைமைகளை விற்க இயேசு அளித்த பதில் பணத்துடன் தொடர்புடையது அல்ல, மாறாக அவர் என்ன தியாகம் செய்ய வேண்டும் என்பதுடன் தொடர்புடையதாக இருந்தது. இந்த மனிதன் தனது செல்வத்தை கைவிட விரும்பாத விஷயத்தை இயேசு நேரடியாக அவனிடம் வெளியரங்கமாக்கினார்.

வேதத்தின் அதிகாரத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டுமென்றால், ஒரு வேத பகுதியின் சூழலையும் அதன் முதன்மை நோக்கத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை இந்த எடுத்துக்காட்டு நமக்கு புரிய வைக்கிறது. அப்போது தான் இயேசு கட்டளையிட்ட காரியங்களை நாம் எவ்வாறு கடைபிடிக்க வேண்டும் என்பதை மதிப்பீடு செய்ய முடியும்.

> புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாட்டைப் போல, ஒரு தத்துவம் அல்ல; இதற்கு தத்துவ சூத்திரம் ஏதுவுமில்லை, இது பல கலாச்சாரங்களுக்கிடையில் மிக எளிதாக கொண்டு செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு குறிப்பிடத்தக்க வகையில் உள்ளது; அது வரலாறு. அதற்கான காரணம் மிகவும் தெளிவானதாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவன் தன்னை வெளிப்படுத்தினார், தேவன் தன்னை வெளிப்படுத்தும்போது, குறிப்பிட்ட நபர்களுக்கு தன்னை வெளிப்படுத்துகிறார். அவர் பொதுவாக தன்னை வெளிப்படுத்தவில்லை. அப்படி செய்திருந்தால், அவை மிகவும் பொதுவானவைகளாக இருக்கிற காரணத்தால் யாருக்கும் பொருந்தாமல் இருந்திருக்கும். ஆகவே, தேவன் தன்னை ஆபிரகாம், ஈசாக்கு,

> யாக்கோபு, மோசே, தாவீது, ஏசாயா மற்றும் எரேமியா போன்றவர்களுக்கும் பின்னர் இயேசு மூலமாக சீஷர்களுக்கும் பேதுருவுக்கும் பவுலுக்கும் வெளிப்படுத்தினார். ஆகவே, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் குறிப்பிட்ட நபர்கள் நமக்கு இருக்கிறார்கள். தேவையின் காரணமாகவே அவ்வாறு செய்யப்படுகிறது. தேவன் சிருஷ்டிகராக இருக்கிறார், சிருஷ்டிப்பு நேரத்திற்கும் இட எல்லைக்கும் உட்பட்டதாக உள்ளது, எனவே தேவன் தம்மை வெளிப்படுத்தும்போது, அவர் நேரத்திற்குள்ளும் இட எல்லைக்குள்ளும் தம்மை வெளிப்படுத்த வேண்டும்.
>
> — Dr. எக்கார்ட் ஜே. ஸ்க்நாபெல்

“புதிய ஏற்பாட்டு இறையியலை ஏன் படிக்க வேண்டும்?” என்கிற இந்த பாடத்தில் புதிய ஏற்பாட்டு புத்தகத்தின் பண்டைய வரலாற்று அமைப்பைப் பற்றி நம்மால் முடிந்தவரை கற்றுக்கொள்ள புதிய ஏற்பாடு ஆவியானவரால் அருளப்படுதல் பற்றியும் அதன் அதிகாரம் பற்றியும் அறிந்து கொள்வது அவசியம் என்பதை நாம் கண்டோம். இப்போது நம் நாளுக்கும் புதிய ஏற்பாட்டின் நாட்களுக்கும் இடையிலான தொடர்ச்சிகளையும் இடைநிறுத்தங்களையும் தெளிவுபடுத்த நாம் தயாராக உள்ளோம்.

# தொடர்ச்சிகள் மற்றும் தொடர்ச்சியின்மைகள்

500 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட ஒரு புத்தகத்தை கற்பனை செய்து கொள்ளுங்கள். இன்று நீங்கள் பேசுவதற்கும் அப்போதைய மொழிக்கும் ஒரளவாவது வித்தியாசம் இருக்கும். கருத்துக்கள் சற்று வித்தியாசமாக விளக்கப்படுவதைக் காண முடியும். புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள் பழைய முறையில் இருக்கும். ஆனால் அதே நேரத்தில், நீங்கள் முயற்சி செய்து படித்தால் அந்த புத்தகம் இன்று உங்கள் வாழ்க்கையுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதை நீங்கள் காணலாம். நீண்ட காலத்திற்கு முன்பு எழுதப்பட்ட ஒரு புத்தகம் கூட நீங்கள் வாழும் உலகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்காது. அதை நீங்கள் கொஞ்சம் கூட புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு வித்தியாசமாக இருக்காது. இதற்கு சிறிது முயற்சி எடுத்தால் இந்த பழைய கால புத்தகம் சொல்வதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புதிய ஏற்பாட்டைக் கற்றுக்கொள்ளும் போது இதைத்தான் நாம் எதிர்கொள்கிறோம். இது கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. இந்த காரணத்திற்காக, அதன் மொழி, கருத்துகள், பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள் நமது நவீன உலகில் நாம் அனுபவிக்கும் காரியங்களிலிருந்து வேறுபட்டவையாக இருக்கின்றன. அதே சமயத்தில், இந்த காரியங்களைப் படிப்பதற்கு நம்மை அர்ப்பணித்தால், புதிய ஏற்பாடு இன்னும் பல வழிகளில் நம் உலகத்துடன் இணைந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

> வேதாகமம் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்பது பொருத்தமானது மற்றும் முக்கியமானது, ஏனெனில் அது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தில் எழுதப்பட்டது. அது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது என்கிற உண்மை தான் வேதாகமத்தை இன்று நமக்குப் பொருத்தமாக ஆக்குகிறது, ஏனென்றால் தேவன் தம்முடைய கிருபையினாலும், நம்மீது அவர் காட்டிய இரக்கத்தினாலும் நம்மிடம் பேசத் தீர்மானித்தார். இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்தை விடவும் இது கருக்குள்ளதாக இருக்கிறது என்று எபிரெய நிருபம் கூறுகிறது. உண்மையில், அந்த வார்த்தை ஒரு சிறிய அறுவை சிகிச்சை செய்யும் கத்தி போன்றது. ஆகவே, தேவனுடைய வார்த்தை நம்மை வெட்டி திறந்து, நம்முடைய அதிகாரமாக நமக்கு மேலே நின்று, நமக்கு ஆணையிடுகிறது மற்றும் நம்மை கோருகிறது, மேலும் நாம் கீழ்ப்படிய வேண்டியவற்றைக் கட்டளையிடுகிறது, மேலும் அதைக் கடைப்பிடிக்க மட்டுமல்ல, அதை நேசிக்க வேண்டும் என்றும் சொல்கிறது. உண்மையில் அதை நேசிக்கவும் அதை மனப்பாடம் செய்யவும் சொல்கிறது. ஆகவே நமக்கு இது முக்கியமானது, ஏனெனில் இது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது.
>
> – Dr. ஜேசன் ஒக்ஸ்

நமக்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையிலான தொடர்ச்சிகள் மற்றும் தொடர்ச்சியின்மைகளை அறிந்து கொள்ள கவனமாக படித்தல் எந்த அளவுக்கு உதவுகிறது என்பதைப் பார்ப்பதற்கு நாம் மூன்று முக்கிய விஷயங்களான சகாப்த பரிசீலனைகள், கலாச்சார பரிசீலனைகள் மற்றும் தனிப்பட்ட பரிசீலனைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவோம்.இந்த மூன்று காரியங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை, ஆனால் அவற்றை தனித்தனியாக கையாள்வது இன்னும் உதவியாக இருக்கும். சில முக்கியமான சகாப்த பரிசீலனைகளை முதலில் பார்ப்போம்.

# சகாப்த பரிசீலனைகள்

வேதாகம வரலாற்றின் ஒரு சகாப்தத்தைப் பற்றி நாம் பேசும்போது, தேவனுடைய வெளிப்பாட்டால் நிறுவப்பட்ட ஒரு காலத்தை மனதில் வைத்திருக்கிறோம், அது மற்ற காலங்களிலிருந்து வேறுபடுகிறது. வரலாற்றைப் பிரிக்க பல வழிகள் இருந்தாலும் எந்தவொரு காலமும் அதற்கு முந்தைய காலத்திலிருந்தும் அதற்குப் பின் வரும் காலங்களிலிருந்தும் முற்றிலுமாக வேறுபடுவதில்லை. இருந்தாலும் நாம் பெரும்பாலும் வேதாகம வரலாற்றை புதிய ஏற்பாட்டு யுகமாகவும் பழைய ஏற்பாட்டு யுகங்களாகவும் பிரிக்கிறோம். புதிய ஏற்பாட்டின் காலத்தை புதிய உடன்படிக்கையின் காலம் என்று நாம் அடையாளம் காண்கிறோம். இந்த சகாப்தம் கிறிஸ்துவின் முதல் வருகையில் தொடங்கியது, அவர் மீண்டும் வருகிற வரை இந்த சகாப்தம் தொடரும். இந்த புதிய ஏற்பாட்டு காலம் மேசியாவின் காலமாக இருப்பதால் இது தனித்துவமான காலமாக இருக்கிறது. தாவீதின் குமாரனான இயேசு தேவனின் சார்பாக ஆட்சி செய்யும் காலம் இது.

புதிய ஏற்பாட்டு இறையியலைப் படிப்பதை சகாப்த பரிசீலனைகள் ஏன் அவசியமாக்குகின்றன என்பதைப் புரிந்து கொள்ள, புதிய உடன்படிக்கை யுகத்தை ஒன்றிணைக்கும் சகாப்த தொடர்ச்சிகளை நாம் பார்ப்போம். பின்னர், சகாப்த தொடர்ச்சியின்மைகளை நாம் பார்ப்போம். முதலில் தொடர்ச்சிகளைப் பார்ப்போம்.

## தொடர்ச்சிகள்

நாம் வாழ்கிற காலத்திற்கும் புதிய ஏற்பாட்டின் காலத்திற்கும் இடையில் பல சகாப்த தொடர்ச்சிகள் உள்ளன. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்துவின் சீஷர்கள் ஊழியம் செய்த அதே தேவனுக்குத் தான் இன்று வாழ்கிற கிறிஸ்தவர்களும் ஊழியம் செய்கிறார்கள் என்பதை உணர்வதே இந்த இணைப்புகளைக் காண சிறந்த வழிகளுள் ஒன்றாகும். பாரம்பரியமான இறையியலாளர்கள் பெரும்பாலும் தேவன் மாறாதவர் என்று வேதம் எவ்வாறு கற்பிக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகிறார்கள். எண்ணாகமம் 23:19, ஏசாயா 46:10 மற்றும் யாக்கோபு 1:17 போன்ற வேத பகுதிகளில் அவருடைய மாற்றமுடியாத குணாதிசயங்கள், அவருடைய நித்திய திட்டம் மற்றும் உடன்படிக்கை உறுதிமொழிகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றனர். அதே மாறாத தேவனுக்கு நாம் ஊழியம் செய்வதால், புதிய ஏற்பாட்டில் தேவன் தம் மக்களிடமிருந்து எதிர்பார்த்தவற்றிலும், இன்று அவர் நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார் என்பதிலும் பல ஒற்றுமைகள் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். எபிரெயர் 13:7-8 யை கவனிக்கவும்:

> தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> விசுவாசத்தைப் பின்பற்றுங்கள். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபிரெயர் 13:7-8).

இங்கே எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் அவருடைய பார்வையாளர்களைப் பார்த்து “அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்” என்று சொல்கிறார். “இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்” என்று சொல்லி தேவனின் மாறாத தன்மையை அவர்களுக்கு நினைவூட்டுவதன் மூலம் அவர் இந்த அறிவுரையை ஆதரித்தார். கடந்த காலத்தில் வாழ்ந்த தங்கள் தலைவர்களின் விசுவாசத்தைப் பின்பற்றினால், தங்கள் நாளிலும் இதேபோன்ற பலன்களைக் காண்பார்கள் என்று அவருடைய பார்வையாளர்கள் நம்பலாம், ஏனென்றால் இயேசு மாறாதவராக இருக்கிறார்.

புதிய ஏற்பாட்டின் முதல் பார்வையாளர்களைப் போலவே, கிறிஸ்து தன் மரணத்தினால் பாவத்திற்கான இறுதி பரிகாரம் செய்தபின் நாமும் வாழ்கிறோம். முதல் நூற்றாண்டு விசுவாசிகளைப் போலவே, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் நாமும் எழுப்பப்பட்டோம். பழைய ஏற்பாட்டில் நிகழ்ந்ததுக்கும் அதிகமாக தேவனின் ஆவி ஊற்றப்படும் காலத்தில் நாம் வாழ்கிறோம். இயேசு கற்பித்த அனைத்தையும் இந்த உலகத்தின் பல இடங்களுக்கு பரப்புவதற்கான ஒரே நோக்கத்துடன் நாம் கிறிஸ்துவின் ஒரே சரீரத்தின் பகுதியாக இருக்கிறோம். புதிய ஏற்பாட்டின் நாட்களுக்கும் நம் நாட்களுக்கும் இடையில் நம்மைப் பிரிக்கக் கூடிய வரலாற்று தூரம் இருக்கிற போதிலும், மாறாத சிருஷ்டிகர் இந்த வகையான சகாப்த தொடர்ச்சிகளை நிறுவியுள்ளார், இதனால் புதிய ஏற்பாட்டை இந்த காலத்திற்கும் நாம் பயன்படுத்தலாம்.

இப்போது, சில சகாப்த பரிசீலனைகளையும், நம்முடைய காலம் மற்றும் புதிய ஏற்பாட்டு காலங்களுக்கிடையில் நிலவும் தொடர்ச்சிகளைப் பற்றியும் பார்த்திருக்கிறோம், புதிய ஏற்பாட்டு இறையியலை நாம் கவனமாக ஆய்வு செய்வதற்கு வழிவகுக்கும் புதிய உடன்படிக்கை சகாப்தத்திற்குள் இருக்கிற சில தொடர்ச்சியின்மைகளைக் காண்போம்.

## தொடர்ச்சியின்மைகள்

புதிய ஏற்பாட்டு நாட்களுக்கும் நம் நாளுக்கும் இடையிலான சகாப்த இடைநிறுத்தங்கள் பழைய ஏற்பாட்டிற்கும் நம் நாளுக்கும் இடையிலான சகாப்த தொடர்ச்சியின்மைகளைப் போல உண்மையாக இல்லை என்பது நிச்சயம். இருந்தாலும் புதிய ஏற்பாட்டைப் படிக்கும்போதெல்லாம் நாம் நினைவில் கொள்ள வேண்டிய சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன.

எபேசியர் 2:20 இல், அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னபோது மிகவும் கெட்டியான சகாப்த தொடர்ச்சியின்மைகளில் ஒன்றைக் குறிப்பிட்டார்:

> அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் [சபை] கட்டப்பட்டதாயிருக்கிறது;



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் (எபேசியர் 2:20).

இங்கே, பவுல் சபையின் அஸ்திபாரங்களாய் இருக்கக்கூடிய அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், கிறிஸ்து இயேசு மற்றும் வரலாறு முழுவதும் உள்ள சபைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை காண்பித்தார்.

இந்த பாடத்தில் நாம் முன்பு கூறியது போல், கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் நம்மீது வைத்திருக்கும் அஸ்திபார அதிகாரத்தை சபையானது அங்கீகரித்துள்ளது. ஆனால் அவர்கள் இப்போது நம்முடன் உடல் ரீதியாக இல்லை என்பதையும் நாம் உணர வேண்டும். இந்த யதார்த்தமானது புதிய ஏற்பாட்டு காலங்களுக்கும் இன்று நம் வாழ்விற்கும் இடையில் பல தொடர்ச்சியின்மைகளை உருவாக்குகிறது.

முதலாவது, புதிய ஏற்பாட்டில் இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் செய்த அற்புதங்களை அங்கீகரிப்பதற்கான பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. இத்தகைய அற்புதங்களைச் செய்வதற்கான வல்லமை இயேசுவையும் அவருடைய அப்போஸ்தலர்களையும் சபையின் அதிகாரங்களாகவும், அஸ்திபார தலைவர்களாகவும் ஆக்கியது. தேவன் இன்று சபையில் அசாதாரணமாக தொடர்ந்து கிரியை செய்கிறார், ஆனால் புதிய சபைத் தலைவர்களின் அதிகாரத்தைப் புரிந்துகொள்ளும் ஒரு வழியாக நாம் அற்புதங்களை அவர்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. மாறாக, சபையில் இன்று நமக்குள்ள அதிகாரம் புதிய ஏற்பாட்டின் தரத்தால் நிறுவப்பட்டுள்ளது. இந்த காரணத்திற்காக, இந்த தரநிலை நம் நாளுக்கு எவ்வாறு பொருந்தும் என்பதை நாம் மிகவும் கவனமாக படிக்க வேண்டும்.

இரண்டாவதாக, புதிய ஏற்பாட்டு காலங்களில் இயேசுவின் அப்போஸ்தலர்களிடமும் தீர்க்கதரிசிகளிடமும் நேரடியாக முறையீடு செய்ய முடிந்தது. கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களிடமும் தீர்க்கதரிசிகளிடமும் வழிகாட்டுதலுக்காகவும் கேள்விகளுக்கான பதில்களுக்காகவும் முறையிட முடிந்தது. 1 மற்றும் 2 கொரிந்தியர் மற்றும் பிலேமோன் போன்ற புத்தகங்களில் கிறிஸ்துவின் சீஷர்களின் வேண்டுகோளுக்கு பவுல் பதிலளித்த விதங்களை நாம் உதாரணமாக காணலாம். புதிய ஏற்பாட்டு நாட்களில், அப்போஸ்தலருடைய நடபடிகள் 15 இல் உள்ள எருசலேம் சங்கத்தில் உள்ளதைப் போல, சபையின் பிரச்சனைகளை சபையின் அஸ்திபாரத் தலைவர்கள் தீர்த்து வைத்தனர். ஆனால் இன்றைய நாளில், இந்த அஸ்திபார அதிகாரங்கள் நம் மத்தியில் காணப்படுவதில்லை. எனவே, புதிய ஏற்பாட்டை தெளிவாகப் படிப்பதில் நாம் சார்ந்திருந்து அது நம் நாளுக்கு எவ்வாறு பொருந்தும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மூன்றாவது, புதிய ஏற்பாட்டு இறையியலைப் படிக்கும்போது, புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் சபையின் அஸ்திபார காலத்திற்கு அவசியமான

இறையியல் முக்கியத்துவங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்ற உண்மையை நாம் அடிக்கடி எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது, ஆனால் அது இன்றைய காலத்திற்கு பொருந்தாமல் இருக்கலாம்.

தேவனுடைய மக்கள் பழைய ஏற்பாட்டு விசுவாசத்திலிருந்து புதிய ஏற்பாட்டு விசுவாசத்திற்கு மாறிக்கொண்டிருந்த காலத்தில் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது. இந்த காரணத்திற்காக, புதிய ஏற்பாட்டில் பேசப்பட்டுள்ள பல காரியங்களை பழைய ஏற்பாட்டு நடைமுறைகள் மற்றும் யூத மரபுகளுடன் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் எவ்வாறு தொடர்புபடுத்த வேண்டும் என்பதைப் பற்றியவைகளாக இருக்கின்றன. கிறிஸ்தவ ஆண்கள் விருத்தசேதனம் செய்ய வேண்டுமா? யூதர்கள் கடைபிடித்த உணவுச் சட்டங்களை கிறிஸ்தவர்கள் கடைபிடிக்க வேண்டுமா? கிறிஸ்துவின் இறுதி பரிகாரத்திற்குப் பிறகு ஆலயத்தில் விலங்குகள் தொடர்ச்சியாக பலியிடப்படுவதை கிறிஸ்தவர்கள் எவ்வாறு புரிந்துகொண்டார்கள்? சபை வாழ்க்கையோடு யூத பண்டிகைகள் மற்றும் சடங்குகள் எவ்வாறு இணைக்கப்பட்டன? இந்த அஸ்திபார இறையியல் பிரச்சினைகள் பல நீண்ட காலத்திற்கு முன்பே தீர்க்கப்பட்டு விட்டன. புதிய உடன்படிக்கையின் அஸ்திபார காலம் முடிந்ததும், கிறிஸ்தவ சபையானது மற்ற சவால்களுக்கு நேராக நகர்ந்தது.

புதிய ஏற்பாட்டைப் படிக்கும்போது, சகாப்த தொடர்ச்சியின்மைகளை சமாளிப்பது கடினமான காரியம். ஆனால், இந்த பண்டைய இறையியல் சர்ச்சைகளுக்கு புதிய ஏற்பாட்டின் பதில்களை இன்று நாம் பயன்படுத்த விரும்பினால், நாம் கடினமாக உழைத்து இந்த வேத பகுதிகளை மிகுந்த கவனத்துடன் படிக்க வேண்டும்.

> ஒருவர் வேதாகமத்தைப் படிக்கும்போது, அதை எப்போதும் அதன் உண்மைச் சூழலில் படிக்க வேண்டும். நாம் அவ்வாறு செய்யும்போது, சில நேரங்களில் அவர்கள் எதிர்கொள்ளும் சில சிக்கல்களை நம்மால் உணர முடிவதில்லை, ஏனென்றால் அவை இன்று நாம் போராடும் சிக்கல்களிலிருந்து வேறுபட்டிருக்கின்றன. உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் யாவும் பழைய உடன்படிக்கையின் கீழ் வாழும் இஸ்ரவேலுடன் பிணைக்கப்பட்டுள்ளன. பின்னர் கிறிஸ்துவின் வருகையும் அதன் நிறைவேறுதலும் சபை சந்திக்க வேண்டிய முக்கிய இறையியல் பிரச்சினைகளுள் ஒன்றாகிறது. பழைய உடன்படிக்கை கோரிக்கைகளின் தொடர்பு என்ன? சபையில் அது எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது? யூதனுக்கும் புறஜாதிக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? அதை அப்படி கூறுவதிலும் நாம் பெரும்பாலும் அந்த மாதிரியான வகைகளில் சிந்திப்பது

> கிடையாது, நாம் முதலில் வேதத்திற்கு திரும்ப சென்று, அதிலுள்ள பதங்களைப் புரிந்துகொண்டு, அதன் சூழலில், அதற்குரிய விளக்கத்தை அறிந்து, உடன்படிக்கைகள் எவ்வாறு செயல்படுகின்றன, அவை கிறிஸ்துவில் எவ்வாறு நிறைவேறுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இது போன்ற நல்ல வேலையை செய்த பின்னர் இது நமக்கு எவ்வாறு பொருந்தும் என்பதை சிந்திக்கத் தொடங்க வேண்டும்.
>
> – Dr. ஸ்டிபன் ஜே. வெல்லும்

சகாப்த பரிசீலனைகளில் உள்ள தொடர்ச்சிகளையும் தொடர்ச்சியின்மைகளையும் கவனித்த நாம் இப்போது ஒரு சில கலாச்சார பரிசீலனைகளையும் ஆராய வேண்டும்.

## கலாச்சார பரிசீலனைகள்

கலாச்சாரத்தைப் பற்றி நாம் பேசும்போது, பகிரப்பட்ட கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளில் இருந்து உருவாகும் மனித சமூகங்களின் வடிவங்கள் நம் மனதில் இருக்கின்றன. கலை, நாகரிகம், தொழில்நுட்பம், அரசியல் கட்டமைப்புகள் மற்றும் அன்றாட மனித தொடர்புகளின் பிற வழக்கங்கள் போன்றவற்றில் கலாச்சாரம் வெளிப்படுகிறது. புதிய ஏற்பாட்டு இறையியலை நாம் கையாளும் போது, முதல் நூற்றாண்டிலும் நம் நாளிலும் இருக்கும் வாழ்க்கையின் கலாச்சார பரிமாணங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

கலாச்சார பரிசீலணைகளில் நாம் கவனம் செலுத்தும்போதெல்லாம், கலாச்சார தொடர்ச்சிகள் மற்றும் இடைநிறுத்தங்கள் இரண்டையும் நாம் கவனிக்க வேண்டும். சில நேரங்களில் இது எளிதான பணி அல்ல. ஆகவே கவனமாக பிரதிபலிப்பதற்கு நம்மை அர்ப்பணிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். கலாச்சார தொடர்ச்சிகளுடன் முதலில் இது எவ்வாறு உண்மையாக இருக்கிறது என்று பார்ப்போம்.

### தொடர்ச்சிகள்

ஒவ்வொரு கலாச்சாரமும் வித்தியாசமானது என்பது நம் அனைவருக்கும் தெரியும், மேலும் அந்த வேறுபாடுகள் தற்காலிக மற்றும் புவியியல் தூரத்துக்கு ஏற்ப பெரிதாக வளர்கின்றன. இந்த வேறுபாடுகளை நாம் புரிந்து கொள்ளும் அளவுக்கு, ஒவ்வொரு மனித கலாச்சாரமும் இந்த ஒரே உலகில் தான் உள்ளன என்று அறிவதும் அவசியம். இந்த உண்மையானது நேரம் மற்றும் புவியியலில் பல கலாச்சார தொடர்ச்சிகளை உருவாக்குகிறது. பூமியிலுள்ள ஒவ்வொரு

கலாச்சாரமும் மனிதர்களின் குணம் மற்றும் சரீர, இயற்கை சூழலால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த காரணிகள் ஒத்ததாக இருப்பதைப் போல, கலாச்சாரத்தின் வடிவங்களும் ஒத்தவைகளாக இருக்கின்றன. பிரசங்கி 1:9 கூறுவதைப் போல:

> முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை (பிரசங்கி 1:9).

இந்த வெளிச்சத்தில், மேலோட்டமான வேறுபாடுகளைப் பார்க்கும்போது, நம் காலத்திற்கும் புதிய ஏற்பாட்டு காலங்களுக்கும் இடையில் ஒரே மாதிரியான கலாச்சார அம்சங்களைக் காணலாம் என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. புதிய ஏற்பாட்டு காலங்களில் மக்கள் செய்ததைப் போலவே நாம் இன்னும் ஆடைகளை அணிந்துகொள்கிறோம், கலையில் மகிழ்கிறோம், குடும்பங்களை கொண்டிருக்கிறோம், அரசாங்கங்களை நிறுவுகிறோம், குற்றங்களை தண்டிக்கிறோம். இந்த காரணத்திற்காக, முதல் நூற்றாண்டில் இருந்த கலாச்சாரங்களுக்கும் நம் நாளில் இருக்கிற கலாச்சாரங்களுக்கும் இடையிலான ஒற்றுமையைப் பார்ப்பது பெரும்பாலும் மிகவும் எளிதானது.

ஒரு சமாரிய ஸ்திரீயுடன் இயேசுவின் உரையாடலை அறிமுகப்படுத்தும் யோவான் 4: 6-7-ல் உள்ள காட்சியை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

> அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: "தாகத்துக்குத் தண்ணீர் தர முடியுமா?" என்றார் (யோவான் 4:6-7).

நம்மில் பலர் இந்த காட்சியின் கலாச்சார பரிமாணங்களின் விளக்கங்களை கேள்விப்பட்டிருக்கிறோம். இயேசுவின் நாளில் யூதர்கள் சமாரியர்களை "அசுத்தமானவர்கள்" என்று கருதி, அவர்களுடன் ஐக்கியம் கொள்ள மறுத்த போதிலும், இயேசு ஒரு சமாரிய ஸ்திரீயுடன் பேசினார்.

நவீன வாசகர்களாகிய நமக்கு இப்போது சமாரியர்களைக் குறித்து ஒரு விதத்தில் அல்லது வேறு விதத்தில் எந்த உணர்வுகளும் தோன்றுவதில்லை. சடங்கு ரீதியாக மக்கள் சுத்தமாக இருக்கிறார்களா இல்லையா என்பது பற்றி கூட நாம் சிந்திப்பதில்லை. ஆனால் இந்த காலத்திலும் இந்த வேதாகமக் காட்சிக்கும் சமூகத்தில் உள்ள தவறான எண்ணங்களுக்கும் இடையிலான குறிப்பிடத்தக்க ஒற்றுமையை நம் நாளில் பார்ப்பது கடினம் அல்ல. துரதிர்ஷ்டவசமாக, இன்று வாழும் மக்கள் இந்த விஷயத்தில் முதல் நூற்றாண்டில் இருந்தவர்களிடமிருந்து மிகவும் வேறுபட்டவர்கள் கிடையாது. புதிய ஏற்பாட்டு நாட்களில் இருந்த மக்கள் வாழ்ந்த அதே உலகில் நாமும் வாழ்வதால் , வேறுபாடுகள் இருந்தாலும், நம்முடைய நவீன கலாச்சார அனுபவங்களுக்கு இணையான பல ஒற்றுமைகளும் இருக்கின்றன.

கலாச்சார பரிசீலனைகளில் நமக்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையிலான கலாச்சார தொடர்ச்சிகள் உள்ளன என்பதை உணர வேண்டியது அவசியம் என்றாலும், புதிய ஏற்பாட்டு இறையியலைப் பற்றிய நமது புரிதலில் கலாச்சார தொடர்ச்சியின்மைகளின் தாக்கத்தையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

## தொடர்ச்சியின்மைகள்

> வேதத்தைப் பற்றிய நமது புரிதல் என்னவென்றால், அது தேவனுடைய வார்த்தையாகும், வேதாகமத்தின் முதன்மை எழுத்தாளர் பரிசுத்த ஆவியானவர் ஆவார். வேதத்தைப் பற்றி உயர்ந்த பதங்களில் நாம் அடிக்கடி பேசுவோம், வேதவசனங்களுக்கு அப்பால் ஏன் நமக்கு எதுவும் தேவைப்படுகிறது?என்கிற கேள்வி சில சமயங்களில் எழுகிறது. கலாச்சாரம் மற்றும் பின்னணிகள் மற்றும் மொழிகளை நாம் ஏன் படிக்க வேண்டும்? நம்மிடம் வேத வசனங்கள் இருந்தால், அவை தேவனுடைய வார்த்தையாக இருந்தால், அவை மட்டும் நமக்குப் போதாதா? பரிசுத்த ஆவியானவர் தான் முதன்மை எழுத்தாளர் என்பதை நாம் அறிவோம், ஆனால் பரிசுத்த ஆவியானவர் மனித எழுத்தாளர்கள் மூலமாக செயல்பட்டு வரலாற்று சூழலில் நமக்கு வேதவசனங்களை வழங்கினார். நமக்கு முன்பிருக்கிற வேதம் வெறும் முன்மொழிவு உண்மைகளின் பட்டியல் இல்லை. நம்மிடம் உள்ள வேதமானது ஒரு சட்ட குறியீட்டு புத்தகம் இல்லை. இதைச் செய், அதைச் செய்யாதே என்று சொல்கிற ஒரு சட்ட புத்தகம் அல்ல. ஒரு பழமொழி, ஒரு நீதிமொழி, ஒன்றன்பின் ஒன்றாக ஒரு பழமொழி - அதிலிருந்து நாம் எப்படியாவது உண்மையைத் தொகுப்பது என்கிற வெறும் ஞானச் சொற்கள் அடங்கியது நம் வேதம் அல்ல. அந்த கூறுகள் வேத வசனங்களில் இருந்தாலும், வேத வாக்கியங்கள் தேவனுடைய வெளிப்பாடாகும், அவை தேவனுடைய வெளிப்பாடு மற்றும் வரலாற்றில் தேவனின் செயல்கள் ஆகும். வரலாற்றில் கொடுக்கப்பட்டுள்ள மனித எழுத்தாளர்களின் வார்த்தைகளில் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை என்று கூறி வேதத்தைப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதலை சில சமயங்களில் சுருக்கமாகக் கூறுகிறோம். “வரலாற்றில்” என்கிற பகுதியே நமக்கு முக்கியமானதாகும். வேத வசனங்கள் எழுதப்பட்ட கலாச்சார சூழல் நமக்கு புரியவில்லை என்றால், நமக்கு மொழி



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புரியவில்லை என்றால், வேத வசனங்களை எளிதில் தவறாகப் புரிந்து கொள்வதற்கு வழிவகுக்கும்.

– Dr. எட்வார்டு எம்.கேசிரியன்

நம் நாளிலும் புதிய ஏற்பாட்டு காலங்களிலும் பல கலாச்சாரக் கண்ணோட்டங்கள் உண்மையில் மிகவும் வேறுபட்டவையாக இருக்கின்றன. புதிய ஏற்பாட்டு இறையியலை விளக்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் அவைகள் முன்வைக்கும் தடைகளை சமாளிக்க நாம் மிகவும் கடினமாக உழைக்க வேண்டும்

இந்த வகையான கலாச்சார தொடர்ச்சியின்மையின் மிகத் தெளிவான உதாரணங்களில் ஒன்று தான் புதிய ஏற்பாட்டை எழுத பயன்படுத்தப்பட்ட மொழி ஆகும். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களில் ஒரு சிலர் இன்று புதிய ஏற்பாட்டை அதன் அசல் கிரேக்கத்தில் படிக்க முடிந்தவர்களாக இருக்கிறார்கள்.

இதையும் தாண்டி முதல் நூற்றாண்டு இலக்கிய மரபுகள் மற்றும் புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் பயன்படுத்திய பழைய ஏற்பாட்டின் எபிரெய வேதாகமம் மற்றும் கிரேக்க வேதாகமம் ஆகியவற்றின் தாக்கத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அன்றைய அரசியல், பொருளாதாரம் மற்றும் பரந்த சமூக நடைமுறைகள் குறித்த நம்முடைய அறியாமையையும் நாம் போக்க வேண்டும். இந்த பணிகளில் நாம் நம்மை அர்ப்பணித்தால் மட்டுமே புதிய ஏற்பாட்டிற்கும் நம் நாளுக்கும் இடையிலான பல கலாச்சார தொடர்ச்சியின்மைகளை சமாளிக்க முடியும்.

லண்டனில் ஒரு அருமையான பழமொழி உண்டு. இது “இடைவெளியை மனதில் கொள்ளுங்கள்” என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் நிலத்தடி சுரங்கப்பாதையில் இருந்து நடை மேடையில் இறங்கும்போது, இடையில் ஒரு இடைவெளி இருக்கிறதென்றால்: “இடைவெளியை மனிதில் கொள்ளுங்கள். இடைவெளியை மனிதில் கொள்ளுங்கள்.” புதிய ஏற்பாட்டின் கலாச்சார சூழலைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவம், புதிய ஏற்பாட்டை நாம் விளக்கி, கற்பித்தல் மற்றும் பிரசங்கிக்கும்போது, ”இடைவெளியை மனதில் கொள்ள வேண்டும்” என்பது ஏன் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான யோசனையாகும்.அன்றைக்கும் இன்றைக்கும் இடையே ஒரு இடைவெளி இருக்கிறது. பயன்படுத்தப்பட்ட மொழியிலும் ஒரு இடைவெளி இருக்கிறது. சமூக அடையாளங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதில் ஒரு இடைவெளி உள்ளது. உறவு எவ்வாறு புரிந்து கொள்ளப்பட்டது என்பதில் ஒரு இடைவெளி உள்ளது. 2,000 ஆண்டுகளுக்கு முன்புள்ள

> வாழ்க்கை மற்றும் இன்றைய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒரு இடைவெளி உள்ளது. இடைவெளியை நாம் பொருட்படுத்தாவிட்டால், நம் சொந்த கலாச்சாரம் மற்றும் விஷயங்களைப் பற்றிய நமது சொந்த புரிதலால் இடைவெளியை நாம் நிரப்புவது தவிர்க்க முடியாததாகி விடும் . வேத பகுதியானது இப்போது நம் வாழ்க்கைக்கு எவ்வாறு பொருந்தும் என்பதைக் காண, வேத பகுதி என்ன சொல்கிறது என்பதைக் கேட்பதற்குப் பதிலாக நாம் செய்வது தலைகீழான காரியமாயிருக்கிறது. வேத பகுதியை புரிந்துகொள்வதற்கான ஒரு முறையாக நம் வாழ்க்கையை மாற்றுகிறோம். வேத பகுதி நம்மிடம் பேசுவதற்கு பதிலாக நாம் வேத பகுதியுடன் பேசுகிறோம். சில விஷயங்களை நாம் இழப்போம் … எழுத்தாளரால் கருதப்பட்டு தரப்பட்ட செய்தி ஆவியானவரால் அருளப்பட்டதென்று நாம் நம்பினால், இடைவெளியை மனதில் கொள்ள முயற்சிக்க விரும்புகிறோம், இதனால் நாம் தேவன் பேசுகிற வார்த்தையைக் கேட்க முடியும், மேலும் நம்முடைய சொந்த சமூகக் கருத்தை வேத பகுதிக்குள் திணிக்காமலும் பார்த்துக்கொள்ள முடியும்.
>
> – Dr. மார்க் ஏ. ஜென்னிங்க்ஸ்

இந்த சகாப்த பரிசீலனைகள் மற்றும் கலாச்சார பரிசீலனைகளின் தொடர்ச்சிகள் மற்றும் தொடர்ச்சியின்மைகளை மனதில் கொண்டு, புதிய ஏற்பாட்டு இறையியலை கவனமாகப் படிக்க தனிப்பட்ட பரிசீலனைகள் ஏன் தேவைப்படுகின்றன என்பதைப் பார்ப்போம்.

## தனிப்பட்ட பரிசீலனைகள்

எல்லா மக்களும் ஒரே மாதிரியாக இல்லை என்பதை பொதுவான அனுபவத்திலிருந்து நாம் அனைவரும் அறிவோம். ஒரே கலாச்சாரத்தில் வாழும் மக்கள் கூட வித்தியாசமாக உள்ளனர். பெரும்பாலும், தொலைதூர இடங்களிலுள்ள மக்களைச் சந்திக்கும்போது அல்லது கடந்த காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றி படிக்கும்போது அவர்களுக்கிடையில் உளவியல், உணர்ச்சி மற்றும் ஆவிக்குரிய வேறுபாடுகள் அதிக அளவில் உள்ளன என்பதை நாம் உணர்கிறோம். நம் அனைவருக்கும் வெவ்வேறு அனுபவங்கள், பலங்கள், பயங்கள், திறமைகள், ஆவிக்குரிய முனைப்புகள் இருக்கின்றன; மக்களிடையே உள்ள வேறுபாடுகளின் பட்டியல் மிக நீளமானதாக இருக்கிறது. ஆகவே, புதிய ஏற்பாட்டு இறையியலைப் படிக்கும்போது, நம் நாளிலும், புதிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏற்பாட்டின் நாட்களிலும் இருந்த மக்களிடையே உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் குறித்து நாம் சரியாக அறிந்திருக்க வேண்டும்.

நம்முடைய முந்தைய பரிசீலனைகளைப் போலவே தனிப்பட்ட பரிசீலனைகளைப் பற்றியும் பார்ப்போம். முதலாவதாக, இப்பொழுது உள்ள மக்களுக்கும் புதிய ஏற்பாட்டு மக்களுக்கும் இடையிலான தனிப்பட்ட தொடர்ச்சிகள் என்ன? என்பதையும் இரண்டாவதாக, அவர்களுக்கிடையேயான தொடர்ச்சியின்மைகள் என்ன? என்பதையும் பார்ப்போம். தொடர்ச்சிகளைப் பற்றி இப்போது பார்ப்போம்.

## தொடர்ச்சிகள்

வேதாகம கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, புதிய ஏற்பாட்டு இறையியலை நாம் கற்றுக் கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் முடியும் என்ற நம்பிக்கையுடன் இருப்பதற்கு மக்களிடையே போதுமான ஒற்றுமைகள் உள்ளன. இதன் விளைவாக, புதிய ஏற்பாட்டு காலத்திலும் இன்றும் உள்ள எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியான மனிதர்கள் தான் என்று வேதாகமம் கற்பிக்கிறது. இன்று இருக்கிற நம்மைப் போலவே புதிய ஏற்பாட்டை எழுதியவர்கள், பார்வையாளர்கள் மற்றும் பிற மனிதர்கள் அனைவரும் தேவனின் சாயலாக இருந்தனர். அவர்களும் நம்மைப் போலவே சிந்திக்கக்கூடியவர்களும் பகுத்தறிவு உள்ளவர்க்களுமாய் இருந்தனர். இன்று நமக்கு இருப்பது போலவே அவர்களுக்கும் மகிழ்ச்சியும் சோகமும் இருந்தது. நம்மைப் போலவே அவர்களும் பாவத்தில் விழுந்து போன தேவ சாயலில் இருந்தவர்கள். அவர்களுக்கும் கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்பு தேவைப்பட்டது. அவர்கள் பாவத்துடன் போராடி, விழுந்துபோன இந்த உலகில் வேதனையையும் துன்பத்தையும் சகித்தார்கள். இன்று நாம் அனுபவிப்பது போலவே,புதிய ஏற்பாட்டு நாட்களில் கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் தேவனின் மன்னிப்பின் கிருபையையும் பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தையும் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவித்தார்கள். இவைகள் மற்றும் பல தனிப்பட்ட தொடர்ச்சிகளின் காரணமாக, புதிய ஏற்பாட்டைப் படிக்கும்போது, அந்தக் காலத்து மக்களுடன் நம்மை எளிதாக இணைக்க முடிகிறது.

உதாரணமாக, ரோமர் 9:2-4 இல் பவுல் தன்னுடைய சக யூதர்களிடம் ஆழ்ந்த உணர்வுகளை இவ்வாறு வெளிப்படுத்தினார்:

> எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே (ரோமர் 9:2-4).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த வசனங்கள் பவுலின் தனிப்பட்ட உணர்ச்சியையும் அனுபவத்தையும் வெளிப்படுத்துகின்றன. அவருடைய உணர்வுகளை நாம் உணரமுடியாத படிக்கு பவுலின் நாளில் இருந்த மனிதனை விட நம்முடைய நாளில் வாழும் மனிதனில் பெரிய மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. இது போன்ற தனிப்பட்ட தொடர்ச்சிகள் பெரும்பாலும் புதிய ஏற்பாட்டை எழுதியவர்கள், பார்வையாளர்கள் மற்றும் கதாபாத்திரங்கள் அனுபவித்ததை நாம் எளிதாக புரிந்துகொள்ள வைக்கின்றன. அவர்களின் அனுபவங்களை நம் நாளில் பயன்படுத்தலாம்.

புதிய ஏற்பாட்டில் உள்ள தனிப்பட்ட பரிசீலனைகள் பல தனிப்பட்ட தொடர்ச்சிகளைக் கொண்டிருக்கிற அதே சமயத்தில், பல தனிப்பட்ட தொடர்ச்சியின்மைகளும் உள்ளன, அவை புதிய ஏற்பாட்டு இறையியலைப் புரிந்துகொள்வதையும் நடைமுறைப்படுத்துவதையும் கடினமாக்குகின்றன.

## தொடர்ச்சியின்மைகள்

புதிய ஏற்பாட்டில் பெரும்பாலும் நாம் காண்கிற குறிப்பிட்ட வகையான நபர்கள் இன்று இருக்கிற நபர்களை விட மிகவும் வித்தியாசமாக இருக்கிறார்கள், சில சமயங்களில் இவர்களுக்கிடையில் சரியான இணைப்பை ஏற்படுத்துவதில் சிக்கல் எழுகிறது. தனிப்பட்ட, உணர்ச்சி போக்குகள், வயது மற்றும் பாலினம் போன்ற பிரச்சினைகள் கூட இருக்கலாம். கவனமாக படிப்பதன் மூலம் மட்டுமே இந்த தடைகளை மேற்கொள்ள முடியும்.

> பல்வேறு வகையான அமைப்புகளில் மற்றும் பல்வேறு வகையான பின்னணிகளில் உள்ள நம் மக்களைப் பற்றி தேவன் அக்கறை உள்ளவராக இருக்கிறார். வேதத்தின் வெவ்வேறு பகுதிகளில், எத்தனை வகையான பின்னணிகள் மற்றும் எத்தனை வெவ்வேறான கலாச்சாரங்கள் வேதம் முழுவதும் பேசப்பட்டன என்பதை நாம் காண முடியும். அதேபோல், அந்த நபர்களிடம் அவர்களின் சூழ்நிலைகளில் தேவன் எவ்வாறு பேசுகிறார் என்பதை நாம் புரிந்துகொண்டவுடன், அவர்களிடமிருந்து உதார ணங்களாக நாம் கற்றுக்கொள்ளலாம், மேலும் அவைகளை நம்முடைய சொந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப மீண்டும் பயன்படுத்த வேண்டும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்ற போல உறுதியான வழிகளில் தேவன் அதைக் கொடுத்தார், மேலும் அது உறுதியான வழிகளிலும் குறிப்பிட்ட சூழ்நிலைகளிலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். ஆனால் வேத பகுதியில் இருக்கும் சரியான கொள்கைகளைப் பெறுவது முக்கியம், எனவே அவற்றை சரியான வழிகளில் மீண்டும் நாம் பயன்படுத்தலாம்.

– Dr. கிரெய்க் எஸ்.கீனர்

உதாரணமாக, எபேசியர் 6: 5, 9 இல் பவுல் இரண்டு குறிப்பிட்ட வகையான மக்களை அறிவுறுத்தினார். அவர் இவ்வாறு கூறினார்:

> வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து...எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்யுங்கள் (எபேசியர் 6:5, 9).

இந்த வார்த்தைகளை நம்மில் பெரும்பாலோர் படிக்கும்போது, எபேசு சபையில் உள்ள அடிமைகள் மற்றும் எஜமான்களிடம் பவுல் என்ன சொன்னார் என்பது பற்றிய மேலோட்டமான விழிப்புணர்வைப் பெறுகிறோம். ஆனால் கிறிஸ்துவில் உள்ள இந்த சகோதர சகோதரிகள் எதிர்கொண்ட போராட்டங்களைப் பற்றிய நமது விழிப்புணர்வு நன்றாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, ஏனென்றால் நம்மில் பெரும்பாலோர் ஒருபோதும் அடிமைகளாகவோ அல்லது எஜமான்களாகவோ இருந்ததில்லை.

அவர்கள் இன்று இருக்கிற நம்மை விட மிகவும் வித்தியாசமானவர்களாக இருந்தனர். இதனால் முதல் நூற்றாண்டில் எபேசு போன்ற இடங்களில் இந்த மக்கள் அனுபவித்ததைப் பற்றி அறிய நாம் தீவிரமாக பிரயாசப்பட வேண்டும். அப்போதுதான் நம்முடைய நாளுக்கு பொருத்தமான இணைகளை அறியத் தொடங்க முடியும், மேலும் இந்த வேத பகுதியில் வழங்கப்படும் பவுலின் இறையியல் முன்னோக்குகளைப் புரிந்து கொள்ளவும் முடியும்.

> புதிய ஏற்பாட்டை நம் வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் புரிந்துகொள்ள எப்போதும் எல்லா நேரங்களிலும் மனதில் வைக்க வேண்டிய முக்கிய சொல் “சூழல்” ஆகும். வேதத்தை நம் வாழ்க்கையில் செயல்முறைப்படுத்துவது மிகவும் வெட்டப்பட்டு உலர வைக்கப்பட்ட மரத்துண்டைப் போல இருக்க வேண்டும், புதிய ஏற்பாட்டு காலங்களில் கூட அப்படி நடக்கவில்லை. பவுல் ஒரு சந்தர்ப்பத்தில், “ஆம், தீமோத்தேயுவே, சுவிசேஷத்திற்காக நீ விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும்” என்று சொல்வதைக் குறித்து எனக்கு மிகுந்த ஈர்ப்பு உண்டு. மற்றொரு சந்தர்ப்பத்தில் அவர் தனது உடன் வேலையாள் ஒருவரிடம், “இல்லை, சுவிசேஷத்தின் பொருட்டு நீ விருத்தசேதனம் செய்யக்கூடாது” என்று கூறுகிறார். ஆகவே அந்த செயல் ஒரு குறிப்பிட்ட கலாச்சார அமைப்பைப் பொறுத்து சரியாகவோ



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தவறாகவோ இருக்கலாம். ஒரு சந்தர்ப்பத்தில், “தீமோத்தேயுவே, நீ விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும், இதன்மூலம் யூதர்களை சுவிசேஷத்தால் சந்திக்க முடியும்” என்கிறார். அது சுவிசேஷத்தின் நிமித்தம் செய்யப்பட வேண்டியிருந்தது. வேறொரு சூழலில், அது தீத்து என்று நான் நம்புகிறேன், “நீ விருத்தசேதனம் செய்யக்கூடாது, ஏனென்றால் நீ விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்று நினைப்பவர்கள் இரட்சிப்புக்கு இதுதான் தேவை என்று நினைக்கிறார்கள், அது சுவிசஷத்திற்கு எதிரானதாக அமைந்து விடும்” என்கிறார். எனவே, நமது தற்போதைய கலாச்சார நிலைமை என்ன என்பதையும், வேதாகமக் கொள்கைகள் அதற்கு எவ்வாறு பொருந்தும் என்பதையும் குறித்து நாம் உண்மையில் புரிந்து கொள்வது அவசியம். நாம் வேதத்தைப் புரிந்துகொள்வது போலவே கலாச்சாரத்தையும் சரியாக புரிந்து கொள்ள வேண்டும் என்பது தான் இதன் அர்த்தமாகும்.
>
> – Dr. டான் லாகிக்

புதிய ஏற்பாட்டின் நாட்களில் ஆரோக்கியமானவர்கள் மற்றும் நோயுற்றவர்கள், ஊனமுற்றோர், வலிமையானவர்கள், பலவீனமானவர்கள், பணக்காரர்கள், ஏழைகள், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள், பிதாக்கள், தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் சகோதரர்கள் தங்கள் நாளில் அவர்கள் யாராக இருந்தார்களோ அதற்கேற்ப புதிய ஏற்பாட்டு இறையியலை தகுந்த வழிகளில் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு அளவிற்கு அல்லது இன்னொரு அளவிற்கு, இவைகள் மற்றும் இதே போன்ற தனிப்பட்ட காரணிகள் புதிய ஏற்பாட்டு இறையியலை நம் காலத்திற்கு நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதை எப்போதும் பாதிக்கும். இந்த தனிப்பட்ட பரிசீலனைகள் புதிய ஏற்பாட்டை விழிப்புடன் படிக்க நம் அனைவரையும் உந்துகின்றன.

# முடிவுரை

கிறிஸ்துவின் சீஷர்கள் புதிய ஏற்பாட்டு இறையியலை ஏன் படிக்க வேண்டும் என்பதை இந்த பாடத்தில் ஆராய்ந்து பார்த்தோம். புதிய ஏற்பாடு ஆவியானவரால் அருளப்படுதலையும் அதன் அதிகாரத்தையும் நாம் கண்டோம் மேலும் புதிய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவரால்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அருளப்பட்டுள்ளதால் நாம் அதைப் படிப்பதற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்றும் பார்த்தோம். புதிய ஏற்பாட்டு காலங்களுக்கும் நம் காலத்துக்கும் இடையிலான சகாப்த, கலாச்சார மற்றும் தனிப்பட்ட தொடர்ச்சிகள் மற்றும் தொடர்ச்சியின்மைகள் எவ்வாறு புதிய ஏற்பாட்டு இறையியலைப் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் நம்மை அர்ப்பணிக்க வைக்கின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொண்டோம்.

புதிய ஏற்பாடு என்பது சாதாரணமாக பார்வையிட வேண்டிய புத்தகம் அல்ல. அதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட தகுதியான புத்தகம் ஆகும். தேவனுடைய சபைக்கான வார்த்தையாக, அதைப் புரிந்துகொள்வதற்கு எதை வேண்டுமானாலும் செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும். இதைத் தொடர்ந்து வரும் பாடங்களில் இந்த இலக்கைத் தொடர்வதற்கு பல முக்கியமான வழிகளில் நாம் கவனம் செலுத்துவோம். நாம் இதைச் செய்யும்போது வேதத்தின் இந்த பகுதியை கவனமாக பிரதிபலிப்பதன் மூலம் கிடைக்கும் பல நன்மைகளைப் பார்ப்போம். புதிய ஏற்பாட்டு இறையியலைக் கற்றுக்கொள்வதில் நாம் ஏன் நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.